
Registered with Registrar of Newspaper for India under No. 17755/69 February 1, 2011.

RANI MUTHU (FORTNIGHTLY) Regd. No. TN/CCN/325/11-13














# வெள்ளி மோகினி





புஷ்பா தங்கதுரை

1

"ஆ!"-இன்ஸ்பெக்டர் சிங் (துரைசிங்கம்) திகைத்தார்.

அவர் எவ்வளவோ வழக்குகளைப்

பார்த்திருக்கிறார்... தீர்த்து வைத்திருக்கிறார். எத்தனை அவிழ்க்க முடியாத முடிச்சுகளை அவிழ்த்திருக்கிறார். உடைக்க முடியாதவைகளை உடைத்திருக்கிறார். எனினும் இந்த ராயல் கோர்ட்டு வழக்கு அவரை எவ்வளவு நிறைய அடித்துவிட்டது!

வழக்கு ஆரம்பத்தில் சாதாரணமாகத் தோன்றியது.

சப்- இன்ஸ்பெக்டர் லிங்க்தான் (ராமலிங்கம்) அதை முதலில் சொன்னான்.

ஒரு அழகான மாலை நேரத்தில் அவர் அறைக்குள் நுழைந்தான். வழக்கின் விவரங்களைக் கூறினான்.

"இன்னிக்கு மத்தியானம் ஒன்றே முக்கால் மணிக்கு போலீஸ்காரர் கந்தசாமி, டாங்க் ரோடு வழியாகப் போயிருக்கிறார். அவரை மயில் (சாமி) என்பவர் வழி மடக்கினார். பக்கத்தில் உள்ள கட்டடத்துக் காவலாளி என்று மயில்சாமி தன்னை அறிமுகப்படுத்தி இருக்கிறார்.

கட்டடத்தின் இரண்டாவது மாடியில் தனகோடி என்று ஒருவர். தனியாக வசிக்கிறார்... வசதியானவர். அவர் நிச்சயம் 'அபார்ட்மெண்டு'க்குள் இருக்கிறார் என்பது மயிலுக்குத் தெரியும்.

இன்று பலமுறை மணி அடித்துவிட்டார். வீட்டுக்குள் இருந்து எந்தப் பதிலும் வரவில்லை. நேற்று பகலிலும் பல முறை அடித்தார். ஆனால் பதில் இல்லை."

இவருக்கு வியப்பாக இருந்தது.

"இவ்வளவுக்கும் இரண்டாம் நாள் இரவுகூட தனகோடி அவரிடம் வந்து பேசி இருக்கிறார். அவரது நலத்தை விசாரித்துவிட்டு, அவருக்கு இனாமாக இருபது ரூபாய் கொடுத்திருக்கிறார். தவிர, ஒரு கடிதத்தைத் தந்து- அதை மறுநாள் மத்தியானத்துக்கு மேல் லிங்கத் தெரு எண் ஒன்றில் கொடுக்கவும் சொல்லி உள்ளார்.

மத்தியானத்துக்கு முன் போகக் கூடாது என்று கண்டிப்பாகச் கூறிவிட்டார். இதை மயில் அந்த விலாசத்தில் கொடுத்துவிட்டார். விலாசதாரரும் ஒரு பதில் கடிதமும், சின்ன பார்சலும் கொடுத்தார்.



இவைகளை தனகோடியிடம் மயில் கொடுக்க முடியவில்லை. காரணம், அவர் வீடு பூட்டிக் கிடந்தது. பல முறை மணி அடித்தும் உள்ளே பதில் இல்லை.

விஷயம் தெரிந்ததும் 'கான்ஸ்டபிள்' கந்தசாமி அந்த 'அபார்ட்மெண்டு'க்கு சென்றிருக்கிறார். மணி அடித்திருக்கிறார்... பதில் வரவில்லை.

அதனால், கதவை உடைத்திருக்கிறார் கந்தசாமி. உள்ளே போய்ப் பார்த்தால், தனகோடி கீழே- இறந்து கிடக்கிறார்!" லிங்க் நிறுத்தினான்.

சிங் கவனமாக கேட்டு வந்தார். இப்போது தலை நிமிர்ந்து "எப்படி இறந்தார்?" என்றார்.

"சுட்டிருக்காங்க!"

"சரி! விசாரணை எவ்வளவு தூரம் போயிருக்கு?"

"இன்ஸ்பெக்டர் சதாசிவம் விசாரிச்சாரு... என்னையும் கூப்பிட்டாரு! போயிருந்தேன்."

"ஓ... அப்படியா...! சிக்கல் எங்கே தெரியுது?"

"இதிலே ஒண்ணு, ரெண்டு விஷயம் எனக்கு மர்மமா இருக்கு! நீங்க வந்து பார்த்தால் தேவலை."

"ஓ!"- என்று பார்வையை மேலே தூக்கினார் சிங்!

"முக்கியமா கொலை நடந்த இடத்தை நீங்க பார்க்கணும். உங்களுக்கு நேரம்."

"நீ சொல்லிட்டா போதாதா, லிங்க். இதோ..."

இந்த வழக்கில் சிங் புகுந்த விதம் இப்படித்தான்!

## 2

டாங்க் ரோட்டின் குளம் என்றைக்கோ மறைந்துவிட்டது.

மார்ஷன் சாலையின் வகிடு போல நடுவில் பிரிந்தது. அமைதியான தெரு. வாசல்களில் நடுத்தர வர்க்கப் பெண்மணிகள்

ஓய்வாக உட்கார்ந்து பேசினார்கள்.

காம்பவுண்டு சதுக்கத்துள் தென்னைகள் முளைத்து நீல வானை தொட ஆசைப்பட்டன.

ராயல் கோர்ட்டில் நின்றபோது, சிங்கின் மூச்சு தடைபட்டு மீண்டது.

அருமையான அபார்ட்மென்டுகள் 'காங்கிரீட்' இங்கே ஒரு கலையாக மலர்ந்திருந்தது.

அடுக்கடுக்காக வந்த ஒரே பால்கனி வளைவுகள், கண்ணில் பாலே நடனம் ஆடின.

இணை இணையாக ஜன்னல்கள்! உறுத்தாத வர்ணப்பூச்சுகள். பூமியில் ஒரு அதிசய தட்டு உட்கார்ந்து இருந்தது. வெளியில் கூட்டம் கூடவில்லை. காரணம், இன்னும் செய்தி போகவில்லை.

இரண்டாவது தளத்திற்கு 'லிப்ட்' பூப்போலத் தூக்கியது. சிவப்பு கம்பளம் விரித்து இருந்தது.

பித்தளைத் தொட்டியில் 'குரோட்டன்ஸ்' இலைகள் நெளிந்தன. வாசல் கதவில் உயர்ரக வெண்கலப் பிடி!

'கான்ஸ்டபிள்' ஒருவர் நின்றிருந்தார். அவரிடம் சத்தம் போட்டு மயில் பேசிக்கொண்டிருந்தார்.

லிங்க் அந்தக் காவலாளியை சிங்குக்கு காண்பித்தான்.

"ஐயா"– என்று உடனே உச்சக் குரலில் மயில் பேச ஆரம்பித்தான்.

"நான் வந்து அன்னிக்கு..."

சிங் அவரை அமர்த்தினார். அப்புறம் அவரிடம் பேசுவதாக கூறினார்.

உள்ளே சதுரமான பெரிய ஹால். கீழே மொசைக். பெரிய வீதியில் ஜன்னல்கள். ஹாலை அடுத்து 'டைனிங்' அறை. அது ஒரு கட்டட சித்திரம். கரும் மரத்தில் மேஜை– நாற்காலிகள். பீங்கான் தட்டுகள் வைத்த கண்ணாடி அலமாரிகள்.

பளிச்சென்று ஒன்று புரிந்தது– இரண்டு அறையும் இருந்த அலங்கோலம். நாற்காலிகள் கவிழ்ந்திருந்தன. திரை கிழிந்திருந்தது.



சில தட்டுகள் சிதறிக் கிடந்தன.

திருடுவதற்காகக் கொலை.

தனகோடி கீழே கிடந்தார். அவரது கிழிந்த சட்டையும், மேலே கீறல்களும். அவர் சண்டை போட்டிருப்பது தெரிந்தது. நேர்த்தியான மர அலமாரி ஒன்றின் அருகே சில அடிகளில் கிடந்தார். பக்கத்தில் ஜன்னல் ஒன்று வெளிச்சமாகச் சொட்டியது.

லிங்க், தனகோடியின் பின்னந்தலையில் இருந்த காயத்தைக் காட்டினான். குண்டு பாய்ந்த இடம்.

சின்ன மூக்கில் சிங் உணர்ந்தார். இரண்டாவது பார்வை கூட வேண்டாம். இது லாபத்துக்காகச் செய்த கொலை என்பது தெளிவானது.

தனகோடி தனியாக இருப்பதைத் தெரிந்து யாரோ உள்ளே புகுந்து அவரைக் கொலை செய்து கொள்ளை அடித்திருக்கிறார்கள்.

சிங் கீழே குனிந்தார். சடலத்தைப் பார்த்தார்.

தனகோடி கண்களைத் திறந்திருந்தார். அதன் வெறுமை யாவரையும் அச்சுறுத்தியது. பீதிகூட கொஞ்சம் தூக்கலாகத் தெரிந்தது.

தொட்டுப் பார்த்தார். தேகம் சில்லிட்டிருந்தது. பல மணி நேரங்கள் அங்கே அப்படியே கிடந்திருக்க வேண்டும்.

ஒரு கண்ணியமான தோற்றம். முகம் நன்றாக சவரம் செய்யப்பட்டு இருந்தது. கைகளும், தோள்களும் திண்டு திண்டாக இருந்தன. திடமான ஆள்தான். அதனால்தான் கொலையாளியோடு நன்றாகச் சண்டை போட்டு இருக்கிறார்.

சண்டை... ஆமாம்! அது சாதாரணச் சண்டை அல்ல– பல நாற்காலிகள் சாய்ந்து கிடந்தன. ஒரு நாற்காலி முறிந்திருந்தது. ஒரு பூச்செம்பு தூரத்தில் போய் சிதறி இருந்தது. பல பீங்கான்கள் உடைந்திருந்தன. ஒரு கண்ணாடி பூராவும் நொறுங்கி கிடந்தது.

எல்லாவற்றையும்விட சுவரில் பெரிதாக மாட்டி இருந்த அந்த

'கிராண்ட் பாதர்' கடிகாரம் அதன் வலுவான இரும்பு 'ஆப்பில்' இருந்து வெளியே எகிறி இருந்தது. அதன் பகுதிகள் சிதறிப் போய் ஆங்காங்கு உதிர்ந்திருந்தன.

"சரியான சண்டைதான்" என்றார் சிங்.

லிங்க் தலை அசைத்தான்.

அப்போது வாசல் கதவு திறந்தது. உள்ளே போலீஸ் டாக்டர் வெங்கிட்டராமை அனுமதித்து மூடிக்கொண்டார்.

"இன்னொரு கொலையா?" என்றார் டாக்டர் உள்ளே நோக்கி.

"ஆமா டாக்டர்... கொள்ளைக்காக கொலை. உள்ளே நாற்காலி கிடக்கும் கோலத்தைப் பாருங்க. இதை பார்த்திங்களா.... இது பழைய நாற்காலி. அது கூட உடைஞ்சு சிதறி..."

"ஆமா. இது ஏன் இங்கே வந்தது!" என்றார், டாக்டர்.

"இது மட்டுமில்லை. இன்னும் ரெண்டு, மூன்று பழைய சாமான்களைப் பார்த்தேன். இதைப் பாருங்க... பழங்கால கடிகாரம். ஓடிட்டு இருந்திருக்கு. என்ன கனம் இருந்திருக்கணும் பாருங்க."

சுவரைக் காட்டினார்!

அந்த 'டானா' ஆணி முரடு. ஒரு அங்குல கனத்தில் சுவருக்குள் இறங்கி இருந்தது.

"சண்டையிலேயா கடிகாரம் உடைஞ்சிருக்கு?" என்றார் டாக்டர்."

"ஆமா. என்னமா சிதறி இருக்குப் பாருங்க."

டாக்டர் மண்டி போட்டு பிரேதம் பக்கத்தில் உட்கார்ந்தார். சில சுருக்கமான சோதனைகள் செய்தார்.

சிங்கைப் பார்த்துத் திரும்பி,

"ஆள் இறந்து 24 மணிநேரம் ஆகி இருக்கும்... சின்ன 'பிஸ்டலை' வச்சுத்தான் சுட்டிருக்காங்க."

அவர் தனகோடி தலையின் ரோமத்தைப் பிய்த்துக் காட்டினார். எவ்வளவு சின்னக் காயம். அது ஒரு நிலைப் புள்ளியாக இப்போது தோன்றியது.



ஆனால், உள்ளே போன குண்டு சிதறிப் போய் தனகோடியின் தொண்டைக் குழாய் வழியே வெளியே வந்திருந்தது. அந்தக் காயங்கள்தான் சற்றுப் பெரிதாகத் தெரிந்தன.

அடுத்து, கதவு திறந்தது. விரல் ரேகை நிபுணரும், போட்டோ கிராபரும் உள்ளே நுழைந்தார்கள்.

"மிஸ்டர்... சுரேன். கைரேகை அவசியம் தேவை. தரோவா சோதியுங்க."

"எஸ் சார்."

சிங்குக்கு ஒரு நிச்சய ஊகம். அந்தக் கொலையைச் செய்தவன் 'அன்மெச்சூர்' அல்ல. 'கிரைம்' உலகில் பழுத்தவனாக இருக்க வேண்டும். போலீஸ் 'ரிக்கார்டில்' அவன் சரித்திரம் அவசியம் இருக்கும்.

சிங் வெளியே வந்தார்.

ராயல் கோர்ட் காவலாளி இன்னும் அங்கே நின்றுகொண்டிருந்தான்.

"உன் பேர் என்னப்பா?"

"மயில்சாமி சார்."

"தனகோடி இங்கே எவ்வளவு காலமா இருக்கார்?"

"மூணு வருஷமா சார்."

"ஆள் எப்படிப்பட்டவர்?"

"ரொம்ப அமைதி... அடக்கம். அனாவசியத்துக்குப் போகமாட்டார்."

"வீட்டிலே வேறே யார் இருக்காங்க?"

"ஒரு அம்மா வருவாங்க... காலையிலே ஏழு மணிக்கு. அவருக்கு வேணுங்கிறதை எல்லாம் செஞ்சுட்டு, பன்னிரண்டு மணி வாக்கிலே போயிடுவாங்க."

"சாப்பாடு?"

"அந்த அம்மா பண்ணி வச்சுடுவாங்க. சில நேரத்திலே வெளியிலே சாப்பிடுவாரு."

"அவரைப் பார்க்கிறதுக்கு நிறைய பேர் வருவாங்களா?"

"அதிகம்னு சொல்ல முடியாது... கொஞ்சமா வருவாங்க."

"எப்படிப்பட்ட ஆளுங்க?"

"எல்லாம் பெரிய, பெரிய ஆளுங்க சார்."

"தனகோடி எதாவது வியாபாரம் செஞ்சாரா?"

"நிறைய பணம் இருக்கும் சார். பழங்காலப் பொருள் இருக்குதிலே..."

சிங்கின் முகம் பளிச்சென்று மேலே எகிறியது. மனசில் அந்தத் தொடர்பு விழுந்தது. "ஓ! அதிலே வியாபாரம் பண்ணுவாரா?"

"வியாபாரம் பண்ணுவாரு! அதைவிட வாங்கி வச்சுக்கிறதிலே அவருக்கு ரொம்ப ஆர்வங்க."

"ஓ... இங்கே நிறைய வச்சிருப்பாரா?"

"வெள்ளி சாமான் நிறைய இருக்கும்.

"அதுவும் பழங்கால சாமான்களா?"

"ஆமாம்."

"இப்போ எதையும் காணலையே... 'டைனிங் ரூம்'லே வச்சிருந்தாரே? திருடங்க எடுத்துட்டுப் போயிருப்பாங்க."

"ஓ... இந்த ஆளுக்கு நிறைய விஷயம் தெரியுமா?"

சிங் மனசில் 'நம்பர் ஒன்' என்ற எழுத்து வந்தது. அதன் முன்னால் 'மயில்சாமி' என்று மானசீகமாக எழுதினார்.

"நீங்க இங்கே அடிக்கடி வருவீங்கதானே?"

"இல்லே! ரெண்டு வாட்டிதான் வந்திருப்பேன்."

"ஓ... கடைசியா எப்போ வந்தீங்க?"

"வந்து... பதினைஞ்சு நாளைக்கு முன்னாடி. பிராந்தி வந்திச்சு–நான்தான் மேலே கொண்டு வச்சேன்."

"இங்க வேலை செஞ்ச அம்மா பேர் என்ன?"

"சுந்தரி. முட்டைத் தெரு சாலையிலே இருக்காங்க."

சிங் மெல்ல லிங்க்கைப் பார்த்தார்.

லிங்க் விலாசத்தைக் குறித்துக்கொண்டிருந்தான்.

"இந்த அம்மா நேத்து, முந்தா நேத்து இங்கே வரலையா?"





## முதன் முதலில்...

நமது சட்டப் பேரவைக்குள் தடம் பதித்த முதல் திரைப்படக் கலைஞர் கே.பி.சுந்தராம்பாள். இவர் 1951–ல் சென்னை சட்ட சபை உறுப்பினராக நியமனம் செய்யப்பட்டார்.

–க.தென்றல் ஆறுமுகம்,
திருமங்கலம்.

## வணக்கம்

ஜப்பானியர்கள் இடுப்பு வரை குனிந்து பணிவாக மரியாதையை வெளிப்படுத்துவார்கள். திபெத்தியர்கள் ஒருவர் மூக்கை ஒருவர் உரசி வணக்கம் தெரிவிப்பார்கள்.

## பதிமூன்று மாதங்கள்

ஆண்டுக்கு 12 மாதங்கள் என்பது நியதி. ஆனால், எத்தியோப்பியா மட்டும் விதிவிலக்கு. அங்கு ஆண்டுக்கு 13 மாதங்கள். 30 நாட்கள் கொண்ட 12 மாதங்களும், 5 நாட்கள் கொண்ட 13–வது மாதமும் வழக்கத்தில் உள்ளன. 'லீப்' ஆண்டில் அந்தக் கூடுதல் மாதத்திற்கு 6 நாட்கள்தான்.

–எஸ்.விஜயலட்சுமி, சென்னை.



## தந்தத்தில் ஆயுதம்

★ தந்தத்தால் செய்யப்படும் ஆயுதம் ஏ.கே.47.

★ நீருக்கு அடியில் பறப்பது பெங்குவின்.

★ ஒலியை ஈர்க்கும் மரம் தூங்குமூஞ்சி.

– கலைவாணி, சென்னை.

தாய்ப்பாலை சேமிக்கும் நிலையம் லண்டனில் உள்ளது.

– அ.ருக்மணி,
சின்னமனூர்.



# முதலில்...


★ முதல் விமானப் போக்குவரத்து ஆம்ஸ்டர்டாம்- லண்டன் நகரங்கள் இடையே தொடங்கப்பட்டது.

★ மிகப் பழமையான அணை திருச்சி கல்லணை.

★ இந்தியாவில் திட்டமிட்டு உருவாக்கப்பட்ட முதல் தொழில் நகரம் ஜாம்ஷெட்பூர்.

★ முதலில் மின் இணைப்பு கொடுக்கப்பட்ட நகரம் கொல்கத்தா.

– உ.சுல்தானா, கீழக்கரை.



# ஆசிரிய சர்வாதிகாரி

★ கொசுக்கள் இல்லாத இடம் துருவப் பிரதேசம்.

★ தேங்காயின் 'மாங்கனீஸ்' சத்து, ஞாபக சக்தியை அதிகரிக்கும்.

★ சர்வாதிகாரி முசோலினி, ஆசிரியராகப் பணியாற்றியவர்.

– உ.ராமநாதன், நாகர்கோவில்.



"மூணு நாளைக்கு முன்னாடியே அவங்க என்கிட்டே சொன்னாங்க. ஒரு மூணு நாள் லீவு எடுத்துட்டு, தங்கை வீட்டுக்குப் போறதாக!"

"அப்போ?" என்று ஒரு கணம் நிறுத்தினார் சிங். கேட்கலாமா என்று யோசனை. தொடர்ந்தார். "தனகோடி தனியா இருப்பாருன்னு யாருக்காவது தெரியுமா?"

மயில் உடனே எதுவும் சொல்லவில்லை.

சரியான பதில் தோன்றவில்லை போலும்.

"நீங்க யாரிடமாவது சொன்னீங்களா?" என்றார், சிங் குறிப்பாக.

"நானா?... சொல்லி இருக்கலாங்க. எத்தனையோ பேர்கிட்டே போறேனா!"

"யார்கிட்டே சொல்லி இருப்பீங்க, யோசியுங்க."

சிங் அந்தப் பார்வையைத் தூக்கி- அவன் மீது வைத்து ஒரு அழுத்தம் கொடுத்தார்.

நாற்பது வயது மயில்சாமி கொஞ்சம் தள்ளாடினார்.

"நான் சொல்லி இருக்கலாம்? ஆனா, எனக்கு நினைவு இல்லே?"

சிங் தன் இரு கைகளையும் அவரது குணாதிசயமாக பின்னால் கட்டினார். பாதங்களை இறுக்கமாகத் தரையில் வைத்து... "சொல்லுங்க. யார்கிட்டே அதைச் சொன்னீங்க?"

கண்ணைக் கிடுக்கி தலையை இரண்டு முறை அசைத்தான் மயில்.

நினைவு எங்கேயாவது ஒட்டிக்கொண்டிருந்தால், அது விழ வேண்டும் என்று நினைத்திருப்பான்.

"சார்... மன்னிச்சுடுங்க. யார்கிட்டேயாவது சொன்னேனான்னு கூட எனக்கு நினைப்பில்லே."

"உங்க மனைவிகிட்டே சொன்னீங்களா?"

"இருக்கலாம்."

"ஆ..." என்று இழுத்து நிறுத்தினார் சிங். அவர் இறுக்கம்

அந்த இழுப்போடு கரைந்தது. "உங்க மனைவி அதை வேறே யார்கிட்டேயாவது சொல்லி இருக்கலாம். அது... அப்புறம்– இந்தக் கொலை சும்மா நடக்கலை. கொள்ளை அடிக்கிற நோக்கோடுதான் நடந்திருக்கு. சார்... வாங்க. தனகோடியோட என்னென்ன பொருள் போயிருக்குன்னு பார்க்கலாம்.

ஆமாம்... ஒரு விஷயம். அவர் வெள்ளிச் சாமான்கள் சேர்க்கிறாருன்னு உங்களுக்கு எப்படித் தெரியும்?"

"விற்கிற வியாபாரிங்க வருவாங்க இல்லையா?" என்றார், மயில்.

"வியாபாரிங்களா?"

"வியாபாரிங்க மாதிரியே இருக்கமாட்டாங்க. பெரிய, பெரிய மனுஷங்களா இருப்பாங்க. அவங்களிலே ஒருத்தர்தான் சொன்னார்– 'தனகோடி சாருக்கு வெள்ளிச் சாமான்லே ஆசை அதிகம்'னு."

"உங்களுக்கு அந்தச் சாமான்களைப் பற்றி ஏதாவது தெரியுமா?"

"தெரியாது சார். ஒவ்வொரு சாமான்களையும் அதன் வெள்ளி எடைக்கு மேலே எத்தனையோ பங்கு பணம் கொடுத்து வாங்குறதாக ஒருத்தர் சொல்லி இருக்காரு. எனக்கு அது புரியாது சார்."

சிங் பார்வையை நிறுத்தினார்.

'இந்த ஆள் உண்மையைச் சொல்றானா?'

ஹாலின் இடப்புறம் உள்ள அறைகளில் நுழைந்தார்கள்.

இரும்பு பீரோக்கள் அங்கே வரிசையாக நின்றன. ஒரு கணம் அசப்பில் வரிசையான கோவில் யானைகள் போல் அவை தோன்றின.

அத்தனையும் கண்ணாடி அலமாரிகள். உட்புறத்தை நிழலாக பிரதிபலித்தன.

ஒரு அதிர்ச்சி சிங்குக்குள் ஓடியது.

அத்தனை தட்டுகளும் காலி.

வெறும் மர 'ஸ்டாண்டு'கள்தான் சோகமாக நின்றன.



அவற்றின் மீது சாய்ந்திருந்த பொருள் திருடு போய்விட்டது.

இரண்டாவது அறையில் நுழைந்தார். அதே சோகக் காட்சி திரும்பவும் 'டிட்டோ'யிட்டது.

சிங்கின் மனசில் ஒரு அழுத்தம் வந்தது. இன்னும் இரண்டு அறைகள் இருந்தன.

'ஒரு வேளை இது இந்த நூற்றாண்டின் மகத்தான கொள்ளையாக இருக்குமோ?'

சுந்தர் அப்போதுதான் உள்ளே நுழைந்தார்.

"சுந்தர்... எதாவது கை ரேகை."

"சா... சார்! ஒண்ணுகூடக் கிடைக்கலை."

"என்ன?"

சிங்கின் நாக்கு அந்த வார்த்தைகளை அழுத்தியது.

சுந்தர் திரும்பச் சொன்னார்.

வார்த்தைகள் வெறுமையில் கரைந்தன.

சிங் தமது கையை முகத்தில் வைத்தார்.

இரண்டு, மூணு யோசனை அடிகள். பிறகு சடாரென்று நின்றார்.

மனசு ஒரு 'ஆடியோ டேப்'பைப் போட்டது.

ஆமாம்! இந்த மயில்சாமியோ, அவர் மனைவியோ– வேலைக்காரி சுந்தரி மூன்று நாட்கள் இல்லாததை யாரிடமாவது சொல்லி இருக்க வேண்டும். அந்தச் செய்தி பரவி– அதை யாரோ அனுகூலம் பண்ணிக்கொண்டு கொள்ளை அடிக்க வந்திருக்க வேண்டும்.

'ஒரு ஆளா... பலரா?'

"சார்" என்று குரல்.

விருட்டென்று தாவினார். 'டைனிங்' அறையில் சிதறிக் கிடந்த உடைசல்கள் இடையே லிங்க் நின்று கொண்டிருந்தான்.

அவன் கையில் ஒரு சின்னத் துப்பாக்கி முளைத்திருந்தது.

ஒலிம்பிக் கோப்பையைக் காண்பிப்பது போல் அதைக் காட்டினான்.

சிங் மென்மையாகப் பார்த்தார். 'பாக்கெட் ஆட்டோமாடிக்' கடிகாரம்.

விழுந்து கிடந்த கடிகாரச் சிதறல்கள் இடையே கிடந்தது.

சிங்கின் விழி விசாரித்தது. 'இதை வச்சுத்தான் சுட்டிருக்கணும்! பரவாயில்லை... இதைக் கொலையாளி விட்டுப்போனது பெரிய விஷயம்.'

"நம்பர் இருக்கா பாரு லிங்க்."

கையில் அதை வாங்கினார். அடக்கமானது. சிறியது. உள்ளங்கையில் இடுங்கிக்கொண்டது.

"நினைச்சது சரியாப் போச்சு" என்றார் சிங்.

"குண்டு சின்னதாக இருக்கணும்னு நினைச்சேன்... லிங்க் கைரேகை."

"சார்... சடலத்தின் ரேகை எடுத்தாச்சு."

"அப்புறம்?"

"நாற்காலியிலே பல ரேகை கிடைச்சிருக்கு..."

"பிரமாதம்."

மயில்சாமி மெல்ல ஒதுங்கிப் போய்க்கொண்டிருந்தார்.

சிங்கை அவர் பின்பற்ற வேண்டுமா... வேண்டாமா? தெரியவில்லை!

எல்லோரும் நிசப்தமாக வேலை செய்துகொண்டிருப்பது, அவர் உணர்வில் உறுத்தி இருக்கும்.

லிங்க் சின்ன முறுவலுடன் சிங்கின் அருகில் வந்து நின்றான். முறுவலை எந்த நொடியிலும் நிறுத்தத் தயாராக இருந்தான்.

எல்லாம் பழைய பொருட்கள் லிங்க். வெள்ளிச் சாமான்கள்.

"சார்..." என்றான் பாதி தயக்கமாக.

சிங் தலையை அசைத்தார்.

"நம்ம நாட்டிலே பழங்கால வெள்ளிச் சாமான் நிறைய உண்டா?"

சிங் திரும்பினார். ஒரு ஓரமாக ஏளனப் புன்னகை நெளிந்து

வந்தது.

"நம்ம அறிவு அவ்வளவுதான். கோவிலையே அந்நி... நாட்டான் காண்பிச்ச அப்புறந்தானே– அடேடே... இவ்வள... மகத்துவம் வாய்ந்ததா?ன்னு நினைக்கிறோம். இன்னொ... நாட்டிலே மட்டும் இத்தனையும் இருந்ததுன்னா... பெருமையி... வெடிச்சுடுவான்."

"கோவில் சரி சார். வெள்ளி..."

சிங் அந்த ஏளனத்தை இன்னும் கழற்றவில்லை.

"வெள்ளிக்கு போயிட்டியே. பித்தளை, வெண்கலத்தை... பார்த்தியா. நம்ம ஊர் குத்து விளக்கெல்லாம் கைப்பொருள்... கடைக்கு வந்துட்டுது."

"ஆமா சார்."

குடம், பாக்கு வெட்டி, விளக்கு, சொம்பு, கைப்பிடி... பல்லாங்குழி, வெற்றிலைப்பெட்டி... அடுக்கிக்கிட்டே போகலாம்... பரம்பரையா வந்த சொத்திலே இது மாதிரி எத்தனை பொருளுங்க... பழங்காலத்ததாக இருக்கும்."

லிங்க்குக்கு ஒரு 'க்ளிக்' அடித்தது... முகத்தில்.

"பழமைன்னா ஆயிரம் வருஷத்துக்கு முன்னாடி கூடப் போயிடறோம். நூறு வருஷத்துக்கு முன்னாடின்னாலும் பழமைதான். ஏன், ஐம்பது வருஷத்துக்கு முன்னாடி கூட பழமைதான். வெள்ளிச் சாமான் வகைகள் நாட்டிலே எவ்வளவு இருக்கு தெரியுமா?"

"ஆயிரக்கணக்கிலே இருக்கு. பரம்பரை குடும்பத்திலே இருக்கு, மடங்களிலே இருக்கு... எத்தனை பேருக்கு இதெல்லாம் பழசு, அதனாலே மதிப்பு அதிகமானதுன்னு தெரியப் போகுது?"

– நிசப்தம்.

"அதை விடு லிங்க். வெறும் மரச் சாமானே நம்மகிட்டே எவ்வளவு இருக்கு. தேர்ச் சிற்பங்களை ஒவ்வொன்றாகப் பெயர்த்துக்கொண்டு போறாங்களே, கவனிக்கலையா சார்?" என்ற குரல் அவரை நிறுத்தியது.

திரும்பினார்.



...கரேகை நிபுணர் அவரை எட்டத்தில் இருந்து ...ழுத்தார்.

## 3

உண்மையில் அந்த 'அபார்ட்மென்டு' முழுவதையும் முடிக்க ... மணி நேரங்கள் வேண்டும்.

...ரு பங்களா பெரிதாய் இருந்தது.

...கைரேகைக்காரர் அழைத்த பக்கம் பால்கனி தெரிந்தது. அதை ...ட்டிய சுவரில் இரண்டு பிரமாண்ட கண்ணாடி ஜன்னல்கள் ...இருந்தன.

அடி அடியாக நடந்துசென்றார். ஒவ்வொன்றிலும் ...யோசனையின் கனம்.

ஜன்னல் அருகே வந்தார். அதன் கண்ணாடி ஒன்றில் ஓட்டை ...விழுந்திருந்தது.

துப்பாக்கி சுட்டது.

...கீழே அதை அடுத்துள்ள சிவப்பு விரிப்பில் சில்லுகள் சிதறிக் ...கிடந்தன.

அடுத்த கணம் ஜன்னலுக்கு நேர் எதிரே உள்ள சுவரில் அவர் ...பார்வை சாடியது.

ரவிவர்மாவின் ஓவியம் சுவரில் தொங்கியது.

அதைக் குடைந்துகொண்டு குண்டு ஓடி இருந்தது.

கழற்றிப் பார்த்தார்.

உள்ளே சுவருக்குள் ஒரு அங்குலம் துளைத்து, அங்கே குண்டு ...குடியிருந்தது.

ஒரு கத்தியை எடுத்து வந்து, மெல்ல தென்னினார். குழியாக்கிய

கையில் அந்தச் சிறு உருவக் குண்டு குதித்து விழுந்தது.

கையிலுள்ள துப்பாக்கியின் வாயில் குண்டை வைத்து பார்த்தார். வெகு பொருத்தம்.

"ரெண்டு தரம் சுட்டிருக்கான்" என்றார், சிங்.

கைரேகை நிபுணர் சலனமில்லாப் பார்வையில் நின்றார்.

"இந்தக் குண்டு தனகோடியைச் சுடத் தவறிடுச்சு! அப்புற நடந்த சண்டையிலே இன்னொரு குண்டு அவர் தலைக்குள்ளே போயிருக்கணும்."

குண்டுடன், சாப்பாட்டு அறைக்குள் சென்றார்.

லிங்க் இன்னும் கீழே குடைந்துகொண்டிருந்தான்.

டாக்டர் சற்று தள்ளி சுவரை கவனித்துக்கொண் இருந்தார்.

"ஏதாவது தென்படுதா?" என்றார், சிங்.

யோசனையைப் பாதியில் கலைத்துவிட்டு, டாக்டர் மேலே வந்தார்.

"குண்டு அவர் தலையின் மேலே இருந்து கீழ்ச் சரிவிலே பாய்ஞ்சிருக்கு."

லிங்க் இன்னும் குப்பைகளைக் கிளறினான். பாதியும் கடிகார பகுதிகள். அது பழங்கால கடிகாரமாக இருக்கும். அதன் உள் உறுப்புகள் உலோக மினுப்பில் மெருகிட்டுத் தெரிந்தன.

அதன் முகம் திருகி இருந்தது. நிமிடத்தையும் வளைந்திருந்தது. 'எத்தகைய வலுவோடு சண்டை போட்டு இருக்கிறார்கள்! இல்லாவிடில் சுவரில் இருந்து அதைப் பிடுங்கி இப்படித் தரையில் எறிய முடியுமா?'

முகப்பின் பித்தளை வளையம் வளைந்திருந்தது. அதன் மேற்பரப்பு லேசாக தீயில் சுட்டது போல சாம்பல் பூத்திருந்தது.

'ஒருவேளை அங்கே பாலிஷ் செய்ய மறந்திருப்பார்கள்.'

சிங் பிறகு வீடு பூராவும் தேடினார். சில அபூர்வ சாமான்கள் கிடைத்தன. பெரிய பொருட்கள் எதுவும் கிடைக்கவில்லை.



# 4

சிங் ஒரு ஊகம் சொன்னார்.

சப்-இன்ஸ்பெக்டர்கள் லிங்க்கும், சதாசிவமும் கேட்டுக்கொண்டார்கள்.

மேலும் இரண்டு மணி நேரங்கள். பிறகு அவர்கள் ஆராய்ச்சியை முடித்துக்கொண்டார்கள். எல்லாரும் களைப்பாக இருந்தார்கள்.

மறுநாள் காலையில் அதே இடத்தில் கூட வேண்டும் என்பது சிங்கின் ஏற்பாடு.

இரவு படுத்தபோது அவருக்கு அது பெரிய வழக்காகத் தோன்றவில்லை.

போன் போட்டு லிங்க்கிடம் பேசினார். "லிங்க்... ஒன்று இது அத்தனையும் மயில்சாமி வேலையா இருக்கணும்."

"எஸ் சார்."

"அல்லது அவனைத் தூண்டி செய்யவிட்டுட்டு, வேறே யாராவது பின்னாடி இருந்திருக்கணும்!"

"எஸ் சார்."

"அல்லது தனகோடியைத் தேடி வருகிற வியாபாரிங்க யாராவது செஞ்சிருக்கணும். இதைத் தவிர வேறு யாரும் செஞ்சிருக்க முடியாது."

"எஸ் சார்."

"திருடு போன பொருள்களிலே நமக்கு ஒரு அனுகூலம் இருக்கு."

"என்ன சார்?"

"அந்த வெள்ளிச் சாமான்களை யாரும் உருக்கி விற்க முடியாது."

"ஏன் சார்?"

"அப்படிச் செஞ்சா இப்போ வெள்ளி விற்கிற விலைக்குத்தான்

பணம் கிடைக்கும். ஆனா, பழம் பொருளா விற்றாத்தான் இதுக்கு மதிப்பு அதிகம். அது தெரிஞ்சுதான் திருடங்க இதைத் திருட வந்திருக்காங்க."

"அப்போ அத்தனை பொருள்களையும் எங்கேயாவது பதுக்கி வச்சுடுவாங்க?"

"ஆமா. ஒரு வருஷத்துக்கு அதைத் தொடாமலும் இருக்கலாம். அப்புறம் ஒவ்வொண்ணா வெளிநாடும், வடநாடும் போக ஆரம்பிச்சுடும். அதுக்குள்ளே நாம இதைக் கண்டுபிடிச்சாகணும்?"

"முடியுமா சார்?"

"நீ என்னவோ இதை மர்மம்னு சொல்லிட்டே... இதிலே எதுவும் எனக்கு அப்படித் தோணலை"

–லிங் பதில் பேசவில்லை.

"சீக்கிரம் கண்டுபிடிச்சுடலாம்... பயப்படாதே. நல்லாத் தூங்கு."

## 5

**ம**றுநாள் காலையில் அவர்கள் அங்கே போனபோது, சிலர் வெளியே வந்து கூடினார்கள்.

ஒரு கண்ணிய பிராந்தியம் அது. அதனால் ரொம்ப அதிகம் பேர் கூடவில்லை.

"என்ன, உடம்பு சரியில்லையா?" என்று மயில்சாமியைப் பார்த்து சிங் கேட்டார்.

அவன் கண்கள் வீங்கி இருந்தன. முகத்தில் வெளிச்சம் குறைந்துவிட்டது.

"ராவிலே தூங்கலை சார்."

"ஏன்?" என்றார், சிங். "அங்கே ஒரு 'ஹால்ட்' போட்டு–ஒருத்தர்கிட்டே ஒரு தப்பான வழிக்குப் போக மாட்டாரு. இப்படி அநியாயமா... இப்படி நினைச்சதிலே தூக்கம் வரலையா?"



"ஆமா சார்."

"வேறே விஷயமில்லையே?"

"இல்லை."

ஏற்கெனவே அபார்ட்மென்டுக்குக் காவல் போட்டிருந்தார்கள்.

சிங்குக்கு, அவர்கள் கதவைத் திறந்துவிட்டார்கள். அவர் உள்ளே போன சில நிமிடங்களில், இதர போலீஸ் அதிகாரிகள் ஒவ்வொருவராகத் தொடர ஆரம்பித்தார்கள்.

இப்போது அந்த பால்கனியில் போய்க் கூடினார்கள்.

சிங் தொடங்கினார்... "நான் வரிசைப்படுத்தி என்ன நடந்திருக்கும்னு சொல்றேன். கேட்கறீங்களா?"

"எஸ்..." என்றார், டாக்டர் வெங்கட்ராம்.

"வீட்டிலே தனகோடி தனியா இருப்பார்னு எப்படியோ கொள்ளைக்காரனுக்கு செய்தி போயாச்சு. அவன் திட்டம் போட்டு வந்திருக்கிறான். வாசல் வழியா வரலே."

"பின்னே எப்படி?"

"தந்திரம் செய்திருக்கான். பால்கனி வழியா வந்திருக்கணும்."

டாக்டர் முகத்தில் ஒரு 'சபாஷ்' போல புன்னகை ஓடியது.

சமையலறை ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தார். பால்கனிகள் வரிசையாக வளைந்து, வளைந்து தெரிந்தன.

ஒரு இடத்தில் வரிசை, வரிசையாக பல் வைத்து தைத்தது போல் இருந்தது.

ஒன்றுக்கு மேல் ஒன்றாக மொத்தம் 12 பால்கனிகள்!

ஒரு நெருங்கிய பார்வை பார்த்தார். இந்த பால்கனிகளில் ஒன்றன் மீது ஒன்றாக ஏறிவிடலாம். சிறிது சாமர்த்தியம் தேவை. அல்லது நாலு, ஐந்து கண்ணி உள்ள சிறிய நூல் ஏணி இருந்தாலும் போதும். அந்த ஏணியில் ஒரு முனையில் வளைந்த கொக்கிகளைப் பொருத்தி வைக்கலாம்.

ஒரு பால்கனியில் இருந்து மற்றொன்றுக்கு சிறிதே பிரயாசையில்

அந்த நூல் ஏணியைத் தூக்கிப் போட்டு, அதன் நுனி கொக்கிகளை பால்கனி கைப்பிடிச் சுவரில் மாட்டிக்கொள்ளும்படி செய்துவிடலாம்.

இது தவிர, வேறு ஒரு அபார்ட்மென்டு வழியாகப் புகுந்து அவர்களின் பால்கனி வழியாக தனகோடி வீட்டு பால்கனிக்கும் போகலாம்.

எல்லோருக்கும் அந்த விஷயத்தில் திருப்தி ஏற்பட்டது.

"அப்புறம்...," என்று தொடர்ந்தார் சிங்.

"தனகோடி வீட்டு பால்கனிக்கு வந்திருக்கிறாங்க. அங்கே இருந்த கண்ணாடி ஜன்னல் வழியே உள்ளே தனகோடியைப் பார்த்திருக்காங்க. அது காலை நேரம். தனகோடி உடை அணிந்துவிட்டு, வெளியே சாப்பிடப் புறப்பட்டிருக்கிறார்.

பால்கனி அறையிலேதான் அவர் துணிமணி எல்லாம் வைக்கிற அலமாரி இருக்கு... அங்கே வந்து 'டிரஸ்' பண்ணும்போது, பால்கனி கண்ணாடி ஜன்னல் வழியா அந்தக் கொள்ளையன் கூட்டிருக்கான்."

"ஆனா... குறி தவறி இருக்கு" என்றார் பிராந்திய இன்ஸ்பெக்டர் சதாசிவம்.

"யு ஆர் ரைட்" என்றார் சிங். பிறகு தொடர்ந்தார்.

"ஒண்ணு பால்கனி கதவு திறந்து இருந்திருக்கணும். அல்லது ஜன்னல் வழியாகத் திறக்க யாராவது உபாயம் பண்ணி இருக்கணும். அல்லது எல்லாத்தையும்விட, வந்திருக்கிற திருடனைப் பிடிக்க, தனகோடியே கதவை திறந்து வெளியே வந்திருக்கணும்."

இன்ஸ்பெக்டர் சதாசிவம் ஆமோதித்துக்கொண்டே வந்தவர், குறுக்கிட்டார்.

"எஸ் சார். ஏதோ ஒரு விதத்திலே திருடன் அபார்ட்மென்டுக்குள்ளே போய் இருக்கிறான்."

"சரி மிஸ்டர் சதாசிவம். உள்ளே போன உடனே ரெண்டு பேருக்கும் சண்டை நடந்திருக்கு. பலமான சண்டை...



தனகோடியும் நல்ல திடமான ஆள்தான்."

"ஆமா. இந்த அறையிலே தொடங்கி 'டைனிங்' அறை போயிட்டாங்க."

"ஆமாம். அங்கேதான் நம்ம தனகோடி அந்தத் திருடனை செமத்தையா வாங்கி இருக்கணும்."

"அப்படியா சொல்றீங்க?"

"ஆமா. நல்ல சண்டை அது. செமத்தையா வாங்கிக்கிட்ட திருடன் கொஞ்சம் பின்வாங்கி இருக்கணும். அப்போ தனகோடி திரும்பி ஒரு நாற்காலியை எடுக்க முனைஞ்சிருக்கணும்."

"ஓ... அதைத் திருடன் மேலே விட்டெறியலாமுன்னா?"

"ஆமாம். அதுக்குத்தான்! அவர் திரும்பி குனிந்தபோது திருடன் அவரைப் பின்புறத்திலே சுட்டிருக்கணும்."

அநேகமாக எல்லாருமே அதை ஆமோதித்தார்கள்.

"ஆனால்..." என்று நிறுத்தினார் சிங்.

எல்லோரும் விழிகளைத் திருப்பினார்கள்.

"இத்தனை பால்கனிகள் ஏறுகிற வரைக்கும் ஒருத்தராவது அந்த ஆளைப் பார்க்கலையா? இந்த பால்கனிங்க எல்லார் கண்ணுக்கும் நேரிடையாத் தெரியுமே?"

"அப்போ சார்... எனக்கு ஒரு தியரி"– சதாசிவம்.

"என்ன?"


"ஒவ்வொரு தளத்திலே இருக்கிற ரெண்டு அபார்ட்மென்டுக்கும் சேர்த்து ஒரே பால்கனி. அதைக் கவனிச்சீங்களா?"

"கவனிச்சேன். நடுவிலே சின்ன கைப்பிடிச் சுவர்தான் இருக்கு."

"அடுத்த அபார்ட்மென்டு பால்கனிக்குப் போனா, அங்கே நுனியிலே இருந்து ஒரு குழாய் கீழே இறங்குது. சாமர்த்திய சாலியா இருந்தா, அது வழியே இறங்கிடலாம்... ஏறிடலாம்."

"அப்போ அடுத்த வீட்டுக்காரங்க பார்க்க மாட்டாங்களா?"

"பார்க்க மாட்டாங்க" என்று குறுக்கிட்டான் லிங். "அந்த அபார்ட்மென்டிலே ஒரு வாரமா யாரும் இல்லை."





"அதை விசாரிச்சுட்டியா லிங்க்...?" என்றார் சிங்.

"ஆமாம். சிநேகான்னு ஒரு மாடல் பெண் இருக்காங்க. இப்போ ஊட்டி போய் இருக்காங்களாம்."

"லிங்க் இந்த மாதிரி விசாரணையிலே கெட்டி" என்றார் சிங்.

"அப்போ?" என்று குறுக்கிட்டார் சதாசிவம். "அந்த வீட்டைத் திறந்து யாராவது உள்ளே போய், அந்த பால்கனிக்கும் போய் இருக்கலாமே?"

சிங் திரும்பினார். "ஏன் லிங்க்... அந்த வீட்டுக் கதவு திறந்திருக்கான்னு பார்த்தியா?"

"பார்த்தேன்... பூட்டி இருக்கு."

"யாராவது போலி சாவியிலே உள்ளே போய் இருக்கலாமில்லே?"

"ம்..."

"அங்கே யார் இருக்காங்க லிங்க்?"

"விசாரிச்சுட்டேன். சிநேகான்னு ஒரு மாடல்னு சொன்னேனே?"

"அவங்க தனியா இருக்காங்களா?"

"ஆமா."

"குட்... குட்! அப்போ பக்கத்து வீடு பூட்டி இருப்பது மற்றொரு வசதி... சரிதானா?"

எல்லோரும் ஆமோதிப்பது போல் தெரிய– லிங்க் மட்டும் முகத்தில் தளைவும், குழைவுமாக நின்றான்.

"என்ன லிங்க்?"

"இதோ வர்றேன்" என்று உள்ளே மறைந்து திரும்பிப் பிரசன்னமானபோது, கையில் ஒரு கோணி வைத்திருந்தான்.

"என்ன... மாஜிக்கா?"

"இல்ல சார். சோபாவுக்கு அடியிலே இதை வச்சிருக்காங்க."

சிங் வாங்கிப் பார்த்தார். அது கோணிப் பை.

"அங்கே எப்படி வந்தது?"

"சோபா இருக்கிற தரையிலே ரெண்டு சணல் பிசி பார்த்தேன். தேடினேன். கண்டுபிடிச்சேன். இதைத்தான் திருட கொண்டு வந்திருக்கணும்."

"அப்போ ஏன் விட்டுட்டுப் போயிருக்கான்?"– சதாசிவம்.

சிங் முகத்தில் ஒரு 'பளிச்' அடித்தது. "ரெண்டு கொண் வந்திருப்பான்? ஆனா, ஒண்ணுலேயே சாமான் அத்தனையு போயிருக்கும் லிங்க். இது ஒரு நல்ல தடயம். எடுத்துப் பத்திரம வச்சுக்க."

"சார்... ரெண்டுன்னு சொல்வானேன்! மூணு கோணியு இருக்கலாமில்லே?"

"இருக்கலாம்."

"அப்போ..." என்றான் லிங்க். "சார் இந்தக் கோணி நிறை சாமான் போட்டு இறக்கினால், குழாய் வழியா இறங் முடியாது..."

"ஆமாம்" என்றார் சதாசிவம்.

"ஏன்... இதை 'லிப்ட்' வழியே இறக்கினாலும் யார் கண்ணாவது பட்டிருக்கும்."

சிங் அதைக் கேட்டு நின்றார்.

யோசனைகள் எங்கெங்கெல்லாமோ அடிபட்டுக்கொண்டிருந்தது.

ஒரு போர்வையைப் போட்டது போல் நிசப்தம்.

சிங் விரல்களைக் கோர்த்து மடக்கினார். பின்னர் "லிங்க்" என்றார் மெல்லிசாக. "நீ சொன்னது சரிதான். 'கேஸ்' அங்கங்கே அடிபட்டு நின்னு போகுது" என்றார்.

மவுனமான அடிகளை வைத்தார். நாற்காலியில் அமர்ந்தார். சதாசிவம் முகத்தின் நிழல்பட்டது.

"இனிமே முறையாத்தான் போகணும். இந்த மயில்சாமியை விசாரணை செய்யணும். தனகோடி கடிதம் கொடுத்துட்டார்னு சொன்னார்? அது யார்கிட்டே போச்சு?"

"லிங்க்குத் தெரு நம்பர் ஒன்றில்."



"அங்கே யார் இருக்கா?"

"அதை விசாரிக்கணும். அப்புறம் அங்கிருந்து ஒரு கடிதாசியும், இன்னொரு பார்சலும் வாங்கிட்டு தனகோடிக்குக் கொண்டு வந்தார் இல்லே."

"ஆமாம். அந்த ரெண்டையும் வாங்கி பத்திரமா வச்சிருக்கேன்."

"லிங்க். இந்த மயில்சாமியைப் பற்றி என்ன சொல்றே?"

"நிறையப் பேசிட்டேன். ஆள் வெகுளி."

"அப்படியா? இந்தத் திருட்டிலே சம்பந்தம் இராது."

"சார்... அவன் திருடணும்னா ராத்திரி நேரத்தைப் பயன்படுத்தி இருப்பான். இப்படி பகல்லே வந்து கொலை செய்தா... ?"

"அதுவும் 'பாயிண்ட்'தான்"

பாதி தனக்குள்ளாகச் சொன்னார் சிங். சட்டென்று அவருக்கே வெறுமையான உணர்ச்சி. வழக்கு அவர் காலைச் சுற்றி எங்கேயோ இழுத்தது.

"ஒண்ணு செய் லிங்க்... மயில்சாமியை அழைச்சிட்டு வா."

## 6

"மயில்சாமி, லிங்க்குத் தெருவுக்கு நீங்க போனீங்க... அங்கே யார் இருந்தாங்க?"

"கோசல்ராம்னு பேரு. பலமுறை இங்கே வந்திருக்கார் சார்."

"அவர்கிட்டே நீங்க தனகோடி எழுதின கடிதத்தைக் கொடுத்தீங்க இல்லையா?"

"கோசல்ராம் பிரிச்சுப் பார்த்தாரு. உள்ளே 'செக்' இருந்தாப்போல இருக்கு. அவர் ஒரு கடிதம் எழுதினாரு. பார்சலும் கொடுத்தாரு."

லிங்க் இப்போது கடிதத்தை எடுத்துக் கொடுத்தான்.

கோசல்ராம் ஆங்கிலத்தில் எழுதி இருந்தார்.

'நன்றி! தாங்கள் விரும்பிய பொருளை பார்சலில் அனுப்
இருக்கிறேன்.'

சிங் நிமிர்ந்தார். "பார்சல்."

பார்சலை 'டீப்பா'யில் வைத்தான் லிங்க். "திறக்கவா?"

திறந்தார்கள்.

அதைப் பார்த்ததும் அதன் பழங்காலம் தெரிந்துவிட்டது.

காப்பி ஜாடி. அதை டிகாஷனுக்காக வைத்திருப்பார்க
போலும்.

சிங்குக்கு ஒரு விஷயம் ஆச்சரியமாக இருக்கும். பொரு
ஐம்பது வருஷம் பழசானாலும் தெரிந்துவிடுகிறது. அதி
ஏதோ ஒரு மாற்றம் நிகழ்ந்துவிடுகிறது. இவ்வளவுக்கு
கண்ணாடியிலோ, உலோகத்திலோ அப்படி மாற்றம் ஏற்ப
வேண்டிய அவசியமில்லை.

"இந்தா மயில்சாமி. இந்த கோசல்ராம் அடிக்க
வந்திருக்காரா?"

"இல்லை சார். ஒருவாட்டி, ரெண்டுவாட்டி வந்திருக்காரு..."

"உன்கிட்டே பேசுவாரா?"

"முதலாளி இருப்பாரான்னு ஒரு வார்த்தைக் கேட்பான்
அவ்வளவுதான்."

"சரி... மயில்சாமி. தனகோடிக்குச் சொந்தக்காரங்க யாரு
கிடையாதா?"

"அது மாதிரி நான் பார்த்ததில்லை சார்."

"யாராவது பெண் அவரைத் தேடி வருவாங்களா?"

"மாட்டாங்க."

"இவர் வெளியிலே போய் தாமதமா வருவாரா?"

"ராத்திரி சாப்பாட்டுக்கு வெளியிலே போவாரு. பத்து மணிக்கு
திரும்புவாரு. சில நேரத்திலே இன்னும் தாமதமாகும்."

"குடிப்பாரா?"

"குடிச்சு நான் பார்த்ததில்லை.""

"இந்த அபார்ட்மென்டிலே இருக்கிற யாராவது அவர்கிட்டே
அதிகம் தொடர்பு வச்சிருக்காங்களா?"



"கிடையாது."

"சரி! அவருக்கு ஏதாவது?"

"அப்படி ஒண்ணும் தெரியலை. நல்லவராத்தான்
இருக்காரு."

"உன்கிட்டே யாராவது ஆசை வார்த்தை காண்பிச்சு
இருக்காங்களா?"

"ஏன் சார்?"

"தனகோடி நிறைய வெள்ளி சேர்த்து வச்சிருக்காரு. அதை
ஏதாவது செய்யலாம்னு..."

"ஐயோ ஆண்டவனே! அந்த மாதிரி யாரும் சொல்லலீங்க!
எல்லாரும் கண்ணியவான்களா இருந்தாங்க."

"சரி... நீங்க போலாம்"

- கொஞ்சம் சோகத்துடன் அவன் உருவம் நகர்ந்தது.

அவன் வெளியேறியதும் கதவை 'கிளிக்'கிட்டு வந்தான்
லிங்க்.

"இந்த ஆசாமி..." என்றார், சதாசிவம்.

"எனக்கு சந்தேகம் இல்லை. ஆனாலும்..."

"கொஞ்சநாள் கண்காணிப்பிலே வைக்கலாம்."

"அதைச் செய்யுங்க."

"சார். கோசல்ராமை அழைச்சிட்டு வரவா?

சிங் புருவத்தைத் தூக்கினார்.

"இல்லை! நாமே அங்க போகலாம்."

## 7

**லி**ங்க்குத் தெரு.

பெரியது அல்ல. எனினும் புத்தம் புது கட்டடங்களாக
இருந்தன. மரங்களின் பசும் விரிவுகள் அவைகளை மூடி

இருந்தன.

தெருவில் 'கழுக் மொழுக்' பிள்ளைகள் கிரிக்கெட் விளையாடினார்கள்.

வெள்ளி போல் பதினொரு மணி வெயில். லேசாகச் சூடேறிய காற்று.

கோசல்ராம் வீட்டுக்குள் நுழைந்ததும், அருமையான குளிர் நிழல். மனம் 'அப்பாடா' என்றது.

இரு அழகிய பிம்பங்கள் அவர்களை உபசரித்தன.

எப்படித் தேர்ந்து பொறுக்கினாரோ?

சந்தன நிறம். மெல்லிய உடம்பு. மென்மையான அங்கங்கள். மில்லி அளவு புன்னகை.

சிங் தமது கார்டைக் கொடுத்து அனுப்பினார்.

அடுத்த கணம் ஒரு தங்கப் பல் உள்பட அத்தனை பற்களோடும் கோசல்ராம் வந்தார். அவர்களை உள்ளே அழைத்துப் போனார்.

நுழைந்த அறையில் ஏ.சி. குளிர் மார்கழிப் பனி போல் அடித்தது.

மறைவான விளக்குகளில் இருந்து மெல்லிய உதய வெளிச்சம்.

"சொப்பனம் போல் இருக்கு. இறந்துட்டார்னு என்னாலே நம்ப முடியவில்லை."

"ரொம்ப நாள் பழக்கமா?"

"மூணு வருஷமா நெருங்கிய பழக்கம்."

"அவருக்கு என்ன தொழில்?"

"அவருக்கு சரித்திரம்னா உயிர். அதுலே இருக்கிற ஆர்வம்தான் இப்படிப் பழம் பொருள் சேர்க்கிறதிலே இறங்கி இருந்தது."

"குறிப்பா வெள்ளிச் சாமான்களுக்கு எப்படி வந்தார்?"

"இதிலேதான் ஆட்கள் குறைவுன்னு நினைச்சார்."

இரு பெண்களும் உள்ளே நுழைந்தார்கள். தட்டுகளில்



குளிர்பானங்கள் வைத்திருந்தார்கள். புன்னகையை சாந்தமாக [illegible]கொண்டு ஒவ்வொருவரிடமும் நீட்டினார்கள்.

"வெள்ளிச் சாமான் நம் நாட்டிலே நிறையக் கிடைக்கிறதா?"

"ம்... நிறைய இருக்கு. ஆனா, சார்... ஜனங்களுக்கு இதிலே ஆர்வமோ, சுவாரசியமோ இல்லை."

"நீங்க அந்த காப்பி ஜாடி கொடுத்துவிட்டீங்க... [illegible]."

"ஆமாம். அது இங்கே நவாப் தோஸ்த் அலி உபயோகிச்சது."

"என்ன அப்படி துல்லியமா சொல்றீங்க?"

"அந்த ஜாடி அடியிலே அவர் பேர் போட்டிருக்கும். இங்கிலாந்திலே ஸ்பெஷலா தயாரானது."

"உங்ககிட்டே வேற எதாவது இருக்கா?"

"நிறைய இருக்கு."

"நான் பார்க்கலாமா?"

"இந்தா... பாரும்மா"–என்றார்.

இரண்டில் ஒன்று இடையை மெல்லிதாகக் குலுக்கி வந்தது.

"சாருக்கு ஒரு செட் சில்வர் காட்டு."

'பாலிஷ்' செய்த சித்திரப் பெட்டி ஒன்றைக் கொண்டு வந்து, முன்னே வைத்தாள் பாமா.

மென்மையாக – வாசமாக மணத்தாள்.

சிங் ஒவ்வொரு சுவாசத்தையும் தீர்க்கமாக இழுத்தான்.

அவள் கண்களின் சாந்தி. அவனை ஒரு முறை அணைத்துவிட்டுத் திரும்பியது.

மனம் இரண்டு முறை சிமிட்டியது.

"இதோ பாருங்க. சின்ன சமாசாரங்கள். நீங்க போனாலே நாட்டுப்புறத்திலே எத்தனையோ வீட்டிலேர்ந்து இதுகளை வாங்கிகிட்டு வரலாம்."

"எல்லாம் 50 வருடங்களுக்கு முன்னால் புழங்கிய

பாத்திரங்கள்தான். பலவித பேஸின்கள், கெண்டி, பூச்சொம்

சிங்கின் முகம் பளிச்சிட்டது.

"இதை நீங்களே தேடி வாங்கி வந்து விற்கலாம். நா
செய்யும்போது கொள்ளை அடிக்கிறான்னு சொல்லிடுவீங்க

"தனகோடி நிறைய வச்சிருந்தாரா?"

"ஓ... நிறைய."

"அவர் வச்சிருக்கிறதை நீங்க பார்த்திங்களா?"

"பல முறை பார்த்திருக்கேன்."

"இப்போ அலமாரி முழுக்கும் காலி."

"அடப் பாவி, அத்தனைச் சாமானையுமா எடுத்துக்கிட்
போயிட்டான்?"

"ஆமாம்! தனகோடிக்கு விரோதி யாராவது உண்டா?"

"ஒருத்தர்கூட கிடையாது."

"இந்த மாதிரி தொழில்லே விரோதம் வருமே!"

"நல்லவேளை... வந்ததில்லை. வியாபாரம் பண்ணுறவ
சரியா இல்லைன்னு லேசாத் தெரிஞ்சாக்கூட அவரே
தனகோடி தொழில் செய்யமாட்டாரு."

"அப்போ இதிலே அப்படி யாராவது அவரைக் கண்
பொறாமைப்பட்டது உண்டா?"

"அப்படி யாரும் இல்லை சார்."

"தனகோடி இறந்து போனது உங்களுக்கு எப்ப
தெரிஞ்சுது?"

"நேத்து மயில்சாமி வந்து சொன்னார்."

"அவர் அடிக்கடி வருவாரா?"

"மாட்டார்... எஜமான் அனுப்பிச்சா வருவாரு."

"அப்போ... இந்தக் கொலை பற்றி உங்களாலே எது
சொல்றதுக்கு இல்லை."

"இல்லை சார்."

"மிஸ்டர் கோசல்ராம், நீங்க எங்களோடு வந்து ஒரு மு



…அலமாரிகளைப் பார்க்க முடியுமா?"

"இப்பவே வர்றேன் சார்."

## 8

மேஜை மீது தனகோடியின் 'போட்டோ' நின்றது.

அதைப் பார்த்ததும் கோசல்ராமுக்கு கண்ணீர் வழிந்துவிட்டது.

"என்ன மனித வாழ்க்கை சார்! என்கிட்டே ரெண்டு நாள் …பேசிட்டுப் போனார். இன்னிக்கு அவர் இல்லை."

அடுத்து அலமாரிகளை ஒவ்வொன்றாகப் பார்த்தார். அவரது …கள் திகிலில் விரிந்தன. ஐந்தாவது பீரோவுக்குப் போன …அவரால் தாங்க முடியவில்லை. நெஞ்சைப் பிடித்து …சாய்ந்தார்.

"என்ன... என்ன?" என்று சிங் எழுந்து ஓடினார்.

வாசலில் அவர் மறைந்துவிட்டதுதான் தாமதம்!

"சிங், இவரையும் கண்காணிக்கணும்."

## 9

அந்தப் பெண் இறங்கியதும் "போர்ட்டர்... போர்ட்டர்" என்றான்.

ஜாடை நாசூக்காக்கும் முயற்சி தெரிந்து ஒரு 'போர்ட்டர்' …வந்து பெட்டியை எடுத்தபோது, அவள் எதுவும் பேசவில்லை. …பின்னால் அவனுடன் நடந்தாள்.

ஒவ்வொரு அடியும் ஒரு அபிநயம். பார்வை பந்து போல் துள்ளித் துள்ளி அவள் முன்னால் ஓடியது.

அத்தனைக் கும்பலும் அவளைப் பார்த்தது.

யார் பார்த்தாலும் முதலில் பார்வை உறைந்தது.

வெளியே போனதும், அவளது டிரைவர் அவளை கண்டுகொண்டுவிட்டார்.

கார் ஒரு இளம் சிட்டு போல் அவள் முன்னால் வந்து நின்றது.

பின் கதவைத் திறந்து ஏறினாள். 'போர்ட்டர்' அவளிடம் பெட்டியை நீட்டினான்.

அவள் பணம் கொடுத்ததும் வண்டி புறப்பட்டது.

மென்மையாகச் சாலையில் வழுவியது கார். பெருஞ் சாலையில் அது புயல். ராயல் கோர்ட் வந்த பிறகு, மீண்டும் அடக்கமாகியது.

இறங்கினாள். டிரைவர் பெட்டியுடன் அவசரமாக தொடர்ந்தான்.

லிட்டில் ஏறினாள். ஒற்றை விரலால் 'இரண்டை' அழுத்தினாள். அது விம்மிக் கொண்டு எழுந்தது. மென்மையாகத் தூக்கிப் போய் அவளை இரண்டாம் தளத்துக்கு எதிராகக் கொண்டு விட்டது.

இறங்கினாள். சிவப்பு விரிப்பில் நடந்தாள். கதவு முன் நின்று சாவியை உள்ளே சொருகினாள். 'க்ளிக்'.

உள்ளே அதே ஸ்டைல் நடை.

அவளைத் தொடர்ந்து டிரைவர்- பெட்டியை உள்ளே கொண்டு வைத்தான்.

அவன் விடைபெற்றுப் போன பிறகு, அவள் கதவை மூடினாள்.

ஸ்டேஷனில் இருந்து அவளைத் தொடர்ந்து வந்துகொண்டிருந்த லிங்- ஐந்து நிமிடம் அவளுக்கு அவகாசம் கொடுத்தான்.

பின்னர் மணியை அழுத்தினான்.

சின்னச் சின்ன சங்கீதத் துணுக்குகள் உள்ளே சிதறின.

கதவு திறந்தது. "என்ன வேணும்?" என்று சற்று ஆயாசத்துடன் கேட்டாள்.



லிங் தனது கார்டை எடுத்து நீட்டினான். படித்துவிட்டு புருவங்களை மட்டும் உயர்த்தினாள்.

"இப்போதே பேசணுமா?"

"ஆமாம்."

"எதைப் பற்றி?"

"மிஸ்டர் தனகோடியைப் பற்றி..."

"ஏன்... அவருக்கு என்ன?"

"கொலை பண்ணிட்டாங்க."

"கொலை..."

அவளிடம் அதிர்ச்சி கிளம்பி இறங்கியது.

"கொலை ஆயிட்டாரா?" அடித் தொண்டையில் கேட்டாள்.

"ஆமா."

அவள் தன்னை அறியாமல் அவனுக்கு இடம் கொடுத்தாள்.

லிங் உள்ளே சென்றான்.

"முதல்லே மேடம்... நீங்க வர்றதுக்காகத்தான் காத்திட்டிருந்தோம். வீடு முழுவதையும் பார்த்துடறேன்."

"ஓ... இங்கே ஏதாவது நடந்திருக்கான்னு பார்க்க விரும்புறீங்க இல்லையா?"

"ஆமா."

"வாங்க."

உள்ளே எல்லா இடமும் பார்த்தார்கள். அலமாரிகளைத் திறக்கச் சொல்லி லிங் பார்த்தான்.

"தயவு செய்து எங்கேயும் தொட்டுடாதீங்க" என்று அவளுக்கு எச்சரிக்கை செய்தான்.

பின்புறம் திறந்து, பால்கனிக்கு வந்தார்கள். அங்கே அப்படியே லிங் நின்றுவிட்டான்.

பால்கனி தள வரிசையின் மூலை முடுக்குவிடாமல் எல்லா

இடங்களையும் பார்த்தான். பிறகு உள்ளே திரும்பி, அவ சித்திரம் போன்ற ஹாலில் வந்து உட்கார்ந்தான்.

அதுவரை மவுனமாக இருந்த சிநேகா பேச ஆரம்பித்தா

"நீங்க வந்த பிறகுதான் உங்க வீட்டை சோதனை பண்ணுறத இருந்தோம்" என்றான் லிங்க்.

"ஏன்... என்ன விஷயம்? தனகோடி எப்படி இறந்தார்?"

"கொலைன்னு சொன்னேன்... சுட்டிருக்காங்க."

"யார்?"

"அதான் தெரியலை."

"இந்த வீட்டை ஏன் பார்க்கிறீங்க?"

"இந்த வீட்டுக்குள்ளே கொலையாளி புகுந்து, தப்பிப் போ இருக்கலாம்னு நினைச்சோம்."

"அதற்கான தடயம் கிடைச்சுதா?"

"இல்லை. இருந்தாலும் எங்க 'சீப்' மிஸ்டர் சிங் வ பார்க்கணும்."

"எப்போ வருவாரு?"

"இன்றைக்கே வந்தாலும் வருவாரு. உங்களுக்கு தனகோ பழக்கமுண்டா?"

"லேசான பழக்கம்."

"இங்கே வருவாரா?"

"மாட்டார். சமயத்திலே லிப்டிலே சந்திப்போம். 'ஹலே என்போம்... அவ்வளவுதான்."

"இந்த ரெண்டாவது தளத்திலே யாராவது சந்தே வரும்படியா வந்திருக்காங்களா?"

"அப்படி யாரையும் பார்க்கலை. இருங்க... கொஞ்சம் கா சாப்பிடுங்க."

எழுந்து உள்ளே போனாள்.

பிடிப்பான உடம்பு. மேலே சரியான கூர்வுகள். செயற்கை இடை நல்ல கிரீம் கலரில் மனசை வாரி இழுத்தது. பின்ன



தலை, கொழுத்த பின்னலாக விழுந்து சிதறி இருந்தது.

காப்பியுடன் வந்தாள்.

"நீங்க என்ன செய்யறீங்க?"

"மாடல்."

"எதாவது கம்பெனிக்கு தொடர்புண்டா?"

"விளம்பர நிறுவனத்துக்கு."

"எவ்வளவு காலமா இந்தத் தொழில்லே இருக்கீங்க?"

"ரெண்டு வருஷமா."

"சரி... நான் வர்றேன்."

ராணி முத்து

சந்தா விவரம்

| | |
|---|---|
| இரண்டு ஆண்டு | ரூ. 275 |
| ஒரு ஆண்டு | ரூ. 150 |
| ஆறு மாதம் | ரூ. 80 |

வெளிநாடுகள்

| | |
|---|---|
| ஒரு ஆண்டு | ரூ. 1225 |
| ஆறு மாதம் | ரூ. 615 |

பணம் அனுப்பவேண்டிய முகவரி:

மேலாளர்,
'ராணி முத்து',
சென்னை–600 007.

## 10

சிங் மேலும் கீழும் நடந்துகொண்டிருந்தார். மனசில் அந்தத் தவிப்பு வந்துவிட்டது.

லிங்க் சொன்னபடி இந்த வழக்கு விசித்திரமாக இருந்தது, மர்மமாக தெரிந்தது. எந்த வழியை நினைத்தாலும் அதில் முரண்பாடு இருந்தது. என்ன செய்ய?

லிங்க் வந்து சிநேகாவைப் பற்றிக் கூறிவிட்டுப் போனான்.

"ஒண்ணும் கிடைக்கலியா?" என்று ஏமாற்றக் குரலில் சிங் கேட்டார்.

"இல்லை" என்றான்.

சிங் யோசிப்பில் கீழே குனிந்தார்.

"அப்புறம், அந்தக் கோசல்ராமுக்கு கண்காணிப்பு போட்டோமே... என்னாச்சு?"

"இதுவரைக்கும் அவர் நடவடிக்கை சரியாத்தான் இருக்குன்னு சொல்றாங்க."

"மயில்சாமி."

"அவன் நடவடிக்கையும் சரியாத்தான் இருக்கு."

"பின்னே எப்படி கொலை நடந்தது?"– கேள்வியைத் தனக்குத் தானே ஓங்கி கேட்டுக்கொண்டார்.

லிங்க் அந்த நேரங்களில் மவுனமாக இருப்பான். அப்போது நிசப்தம் தேவை. சிங்கின் மூளை தீவிரமாக வேலை செய்கிறது என்று அர்த்தம்.

அமைதி இன்னும் இறுகியது.

சிங் திரும்பினார். திடீரென்று முகத்தைத் தூக்கினார்.

"ஒரு விஷயம் லிங்க். யாரோ தெரிஞ்சவங்கதான் இதைச் செய்திருக்காங்க. சிநேகா ஒரு வாரம் எங்கே போனாங்க... கேட்டியா?"

"ஊட்டிக்கு."

"அங்கே என்ன வேலை?"

"மாடலிங்..."

"கற்பனையில் பதில் சொல்லாதே. ஊட்டியிலே என்ன நடந்ததுன்னு விசாரி."

"எஸ் சார்."

"பக்கத்து அபார்ட்மென்ட்டைத்தான் விசாரிச்சோம். இப்போ அத்தனையும் விசாரிச்சு எனக்கு ஒரு 'ரிப்போர்ட்' வேணும். சீக்கிரம் முடியுமா?"

"நிச்சயம் முடியும்."

"தீவிரமா விசாரி, பார்ப்போம். சீக்கிரம் விஷயத்தை முடிக்கணும்."

"ஓகே. சார்."

சிங் வேறு நினைவுகளில் மனத்தைச் செலுத்த முயன்றார்.

'இல்லை... முடியவில்லை. அது அவர் பலகீனம்.'

கையில் வழக்கு இருந்தால்– அது அவரது அறிவுக்குச் சவாலாக இருந்தால், மனசை அதைவிட்டு நெகிழ்த்த முடியாது. எப்போதும் அந்த நிறைவு நெருடிக்கொண்டே இருக்கும்.



அறையில் தனியாக உலாவினார்.

ஏதாவது செய்ய வேண்டும் என்று மனம் குறுகுறுத்தது.

'வெளியே போகலாம்' என்று நினைக்க, "சார்" என்று குரல்.

திரும்பினார்.

புன்னகை பூக்க, லிங்க் நின்றுகொண்டிருந்தான்.

"மன்னிக்கணும் சார். இந்த கோசல்ராம் விஷயத்திலே..." என்று சொல்லி 'பிரீப் கேஸை' மேசை மீது வைத்து பூட்டுகளை விடுத்தான்.

"வியாபாரம் நடத்தறாரே. வெளிநாட்டுக்கு ஒரு விலைப் பட்டியல் தயார் பண்ணி இருக்காரு. அதை ரகசிய வழியிலே கடத்தி வந்திருக்கேன்" என்றான்.

பட்டியலை அவர் கையில் கொடுத்தான்.

'ஆர்ட்' காகித புத்தகம் அது. பெண்ணின் உடல் போல வழுகியது. நல்ல கனம். உள்ளே படங்கள் கண்ணைப் பறித்தன. எல்லாப் படங்களும்– எப்படித்தான் எடுத்தார்களோ?

எந்தப் படத்தைப் பார்த்தாலும் வாங்க வேண்டும் போல் தோன்றியது. அவ்வளவு கவர்ச்சி!

ஒவ்வொன்றின் அடியிலும் விலைகள் போட்டிருந்தது.

இரண்டு, மூன்று விலைகளைப் பார்த்தார். தலை 'கிர்ர்ர்' ஆகியது. எல்லாம் டாலர் விலைக்கு. 500 டாலருக்கு (ரூ.22 ஆயிரம்) குறைந்தது எதுவும் கிடையாது.

"ரைட் லிங்க். இது ஒரு நல்ல ஆவணம்."

லிங்க் முகத்தில் மறுபடி புன்னகை. "நான் வரேன் சார்."

இவர், காகிதங்களைப் பையில் சொறுகினார். இன்னும் சிறிது நேரம் யோசிப்பு.

பிறகு உள்ளே போய் ஜிப்பாவும், வேட்டியும் உடுத்தி– ஒரு பிரமுகர் தோற்றம் உண்டாக்கினார்.

வேண்டுமென்றே பல மோதிரங்களை அணிந்துகொண்டு– அத்தனை விரல்களையும் கனம் ஆக்கினார்.

வழக்கமாக அவருக்கு ஒரு வாடகை கார் உண்டு. அதைக் கொண்டு வரச் சொல்லி ஏறினார்.

## 11

அண்ணா சாலையில் அதுதான் பெரிய– பழங்கால பொருள் கடை! நெற்றியில் விசால பெயர்ப் பலகை.

வாசலில் நடன கணபதி, வெண்கலத்தில் நின்றார்.

கண்ணாடிக் கதவில் 'OPEN' என்று சிவப்பு வார்த்தை பதிந்திருந்தது. உள்ளே போனபோது, "ஆயியே... ஆயியே" என்று அழைத்தார்கள்.

'இங்கே கூட தமிழர் கடை வைக்கவில்லையா?' என்று வருத்தமாக நினைத்தார்.

'ஆள் யார், எப்படிப்பட்டவர்... என்ன வேண்டும் இவருக்கு?' என்பதை அறிய அவர்கள் குறியாக இருந்தார்கள்.

செக்கச் சிவந்த இளைஞன், தீர்க்கமான மூக்கோடு அவர் பின்னே சுற்றினான்.

சாமானியத்தில் இருந்து தந்தப் பல்லக்கு வரை எல்லா சாமான்களையும் சிங் பார்த்தார்.

இடை இடையே விலை கேட்டார். ஒவ்வொரு விலையுமே யானை விலையல்ல. யானைக் கூட்டத்தின் விலையாக இருந்தது.

கடைசியில் ஒரு சின்ன கரண்டியை மட்டும் எடுத்தார். சித்திர வேலைப்பாடு அதில் இருந்தது. பழம் வெள்ளி ஆதலால் சிறிது மட்கி தெரிந்தது.

விலை கேட்டபோது, ரொம்ப மலிவு. ரூ.2 ஆயிரம் என்றார்கள்.

"இதற்கா?"

"ஆமாம். இது 'ஈஸ்ட் இண்டியா' கம்பெனி கலெக்டர்கிட்டே



இருந்த கரண்டி."

"யார் அவர்?" என்று வேண்டுமென்றே கேட்டார் சிங்.

"வில்லியம் வாலஸ்?" என்றார்கள் அவர்கள்.

"இதென்ன? இந்திய வேலைப்பாடு மாதிரி இருக்கு" என்றார் சிங்.

"இந்திய வேலைப்பாடுதான். அதுவும் தமிழ்நாட்டிலே செய்தது."

"எப்படி தெரியும் உங்களுக்கு?"

"பின்னால் பாருங்க."

பார்த்தார். கரண்டி பின்புறத்தில் சங்கும், சக்கரமும் நுட்பமாகச் செதுக்கப்பட்டிருந்தன.

"இதென்ன?" என்றார் சிங்.

அந்தக் காலத்தில் பெரிய கோவில்லே இருந்த கரண்டி! கோவிலுக்கு நிறைய நன்மைகள் செய்தார் வாலஸ். அதனாலே கோவில் பெரியவர்கள் அவரைக் கோவிலுக்கு அழைத்து, பரிவட்டம் முதலிய மரியாதைக் கொடுத்தார்கள். கோவில்லே இருந்த பழங்கால சாமான்களைப் பார்க்கணும்னு வாலஸ் கேட்டார். கொண்டு வந்து காண்பித்தார்கள். அதிலே நாலைஞ்சு பொருள்களை மட்டும் விலை கொடுத்து வாங்கி இருக்கிறார். அதிலே இது ஒன்று.

"சிங்குக்கு இதெல்லாம் எப்படித் தெரியும்?" என்றார்.

"அது தெரியாதா சார்! இங்கே தனகோடின்னு ஒருத்தர் இருந்தார். இப்போதான் இறந்து போனார்... அநியாயமாக. அவர்தான் இப்படி ஒவ்வொரு பொருளுக்கும் ஒரு கதை சொல்ல ஆரம்பிச்சார்."

"அதெல்லாம் உண்மையா?"

"உண்மைதான். அதற்குக் காரணம் உண்டு சார்."

"என்ன?"

"அதுபோல சரியா வம்சாவளி சொன்னாத்தான் வெள்ளைக்காரங்க அதிகம் மதிப்புப் போடுறாங்க."

"தனகோடிக்கு எப்படி?"

"அத்தனையும் புத்தகம் பார்த்துத்தான் சொன்னாரு."

"............"

"அவர்தான் இந்த கரண்டி பற்றி ஆராய்ச்சியே சொன்னாரு."

"யார் இந்த தனகோடி...! அவர் எங்கே இருக்காரு?"

"பெரிய பணக்காரர் சார். ராயல் கோர்ட்டிலே இருந்தாரு."

"பிஸினஸ்காரரா?"

"ஆமா சார். இந்த மாதிரி பழம் பொருள்களை வாங்கி விற்பாரு."

"இப்போ அவர்கிட்டே எதாவது கிடைக்குமா?"

"அவர்தான் இறந்துட்டாரே. அவர் சேகரிச்ச சாமான்களை எல்லாம் கொள்ளை அடிச்சுட்டுப் போயிட்டாங்க."

"ஓ... அதைத்தான் சொன்னாங்களா? நிறைய வெள்ளிச் சாமான்கள் விற்பனைக்கு வந்திருக்காமே...?"

"இங்கே எதுவும் வரலைங்க."

"வந்தா சொல்லுங்க... பல லட்ச ரூபாய் இதிலே முடக்குறதா இருக்கேன்."

அந்த வார்த்தைகள் அவனுக்குள் சென்று எதையோ கிளப்பி இருக்க வேண்டும்.

"இதோ இருங்க..." என்று சொல்லி– மறைப்பில் ஒரு பகுதியைத் திறந்து உள்ளே போனான். அங்கே கதவு இருக்கிறது என்று அப்போதுதான் இவருக்கு தெரிந்தது.

போன வேகத்தில் வெளியே வந்தான். "சார் வாங்க. உங்களை முதலாளி பார்க்கணுங்கிறாரு" என்றான்.

கொஞ்சம் பெரிய அறை. தேக்கு வைத்து இழைத்திருந்தது. 'பாலிஷ்' செய்த பளபளப்பு. துணுக்குகளாக அங்கங்கே வெளிச்ச ஒளிகள். பாதி சொப்பனம் போல உட்பகுதியைக் காண்பித்தது.

ஒரு ஒல்லியான ஆசாமி மேசை முன் உட்கார்ந்திருந்தார்.



புன்னகை உண்டாக்கினார். மகா கோரமாக இருந்தது.

"வாங்க... உட்காருங்க."

உட்கார்ந்தார்.

"இங்கே ஏ.சி. கொஞ்சம் அதிகம்."

"என்ன சாப்பிடுறீங்க?"

"ஏதுவும் வேண்டாம்."

"ஏன்னவோ வெள்ளிச் சாமான்கள் வேணும்னு சொன்னீங்களாம்?"

"ஆமாங்க. திருச்சூர்லே இருந்து வர்றேன். நான் ஒரு 'பிஸினஸ் மேன்'. இப்போ அரிய வெள்ளி ரகம் ஏதாவது கிடைக்கலாம்னு வாங்க வந்தேன்."

"வேறே என்னவோ சொன்னீங்களாமே?"

"ஆமா. யார் பொருளோ ஒரேயடியா கொள்ளை போயிருச்சுன்னு உங்க சிப்பந்தி சொன்னாரு. அப்படிப் போனா... அதெல்லாம் ரெண்டு நாளிலே மார்க்கெட்டுக்கு– குறைவான விலையிலே வந்துடுமே. வாங்கிட்டுப் போயிடலாம்னு..."

"அதெப்படி வெளியிலே கொண்டு வந்து விற்பாங்க. 'ரிஸ்க்' இருக்குதில்லே..."

"ரிஸ்க்தான்! ஆனா, இதுமாதிரி பொருள் எல்லாம் கேரளத்திலே ரகசியமா வெளியிலே வந்துடும். யாரும் அதைப் பகிரங்கப்படுத்த மாட்டாங்க."

அவர் நெற்றியில் பல சுருக்கு ஓடியது. யோசிக்கிறார். பார்வை இன்னும் சிங்கை அளந்துகொண்டிருந்தது.

கதவைத் தள்ளி உள்ளே நுழைந்தார்.

உள்ளே விறுவிறுப்பான ஏ.சி.

மானேஜர் திகைக்க, தமது போலீஸ் அடையாள கார்டை சிங் காண்பித்தார்.

"அறை 808 இங்கே கிடையாதில்லே?"

"கிடையாது."

"அந்த நம்பரைக் கேட்டு போன் வந்தா, என் அலுவலகத்துக்கு

உடனே தெரிவிக்கணும்."

"ஓ.கே. சார். உத்தரவு கொடுக்கறேன்."

## 12

நாட்கள் கரைந்து ஒரு வாரம் ஓடியது.

அந்த நம்பரைக் கேட்டு, அழைப்பு வரவில்லை. ஆளும் தேடி வரவில்லை.

சிங்குக்கு ஏமாற்றம். யாராவது வந்து வசமாக அகப்படுவார்கள் என்று நினைத்தார். யாரும் அகப்படவில்லை.

திரும்பவும் அங்கே சென்றார்.

முதலாளியைப் பார்த்தார்.

"சார், நீங்க சொன்னபடி தனகோடியோட பொருள் எல்லாம் திருடு போயிருக்கு... உண்மை. ஆனா, எல்லாம் பதுங்கி இருக்கு. ரகசிய மார்க்கெட்டுக்குக்கூட இன்னும் வரலை."

சிங் திரும்பினார்.

"சார்" என்று அழைத்தார் அவர். "இன்னும் ஓட்டலேயே தங்கி இருக்கீங்களா?"

"ஆமா."

"வசதியா இருக்கீங்களா?"

"இருக்கேன், ஏன்?"

அவர் ஒரு சிரிப்புச் சிரித்தார். சத்தமில்லை. ஆனால், அர்த்தம் இருந்தது.

"நீங்க விரும்பினா..." என்று இழுத்தார்.

"என்ன... சொல்லுங்க?"

"உங்க மாதிரி 'பிஸினஸ்' ஜனங்க... பல இடம் அலையறீங்கல்ல. உடம்பு துவண்டு போய் நோவு எடுக்கும். அதுக்குத்தான்."

"ஏதாவது தைலம் வச்சிருக்கீங்களா?"

"அதுல்ல. ஆனா, தேய்ச்சுவிட ஆள் இருக்கு. லேடீஸ்."





ஒரு கணம் நின்றார். உடனே மறுக்க மனம் ஓடியது. ஆனால், ஒரு குறுக்கு யோசனை அதை வெட்டியது.

“அனுப்புங்க.”

“ரைட் சார். ராத்திரி எட்டு மணிக்கு வருவாங்க.”

சிங்கின் ஆலோசனை போல் 700-ம் நம்பர் அறை- தற்காலிகமாக 800 ஆக மாற்றப்பட்டது. நல்ல வேளையாக அந்த வாரங்களில் அதிகக் கூட்டம் இல்லாமல் இருந்தது.

எட்டு மணி.

ஜன்னல் கண்ணாடி வழியே சிங் வெளியே பார்த்தார்.

ஒரு வித நீல இருட்டில் கீழே முன் முற்றம் முழுவதும் நன்றாகத் தெரிந்தது. அதில் நடப்பவர்கள் பிரமையில் இருப்பவர்கள் போல் தோன்றினார்கள்.

ஓரமாக கார்கள் வரிசை. நடுவில் பூங்கா. அதில் கன்னி. அவளைச் சுற்றி சிலிர்ப்புடன் குளம்!

ஒரு வெள்ளை கார் உள்ளே வந்தது.

நழுவியவாறு நின்றது.

சிங்கின் கண்கள் கொட்டின.

இரு உருவங்கள் அதில் இருந்து இறங்கின. ஏற்கெனவே பார்த்த அதே இளசுகள். அவருக்கு பானம் கொடுத்தார்களே!

ஒருகணம் சிங்குக்குள் ஒரு ஓசை வேகமாக உள்ளே வந்தது. கண்கள் கரைந்து நின்றன.

சுவாசம் ஒரு சர்ப்பமாக வளைந்தது.

திரையை மூடினார். உள்ளே ஊட்டி குளிர்.

மெத்தையில் அமர்ந்தார். மனம் சுழிந்து சென்றது. அந்தப் பழைய நாட்கள். அவருக்கு இருபத்தொரு வயது இருக்கும்.

அந்த நாளில் முதலிரவை தனி நாளாகக் கொண்டாடுவார்கள்... திருமணமான பல மாதங்கள் கழித்து.

மேளதாளத்துடன் முகூர்த்தம். எங்கும் ‘கிளுகிளுப்பு’.

இரண்டரை நிமிடங்கள்.



கதவை மென்மையாகத் திறந்து உள்ளே வந்தார்கள், மிருது முறுவலைப் பூத்துக்கொண்டு.

உள்ளே வாசம் மெல்லிதாகச் சுழன்றது.

ஒருத்தி கவனமாக உள் தாழ்ப்பாள் போட்டு வந்தாள்.

இருவரும் அருகில் வந்து நிற்பது தெரிந்தது.

அவர்களது [illegible] அவரைத் தாக்கியது.

நிமிர்ந்து பார்த்தார்.

“இது என்ன மணம்?”

“ஆமாம். அந்தக் கணத்தில் இருவரும் தங்கள் சேலையை ஒரு சின்ன இழுப்பில் கீழே தள்ளி இருந்தார்கள்.

அவிழ்ந்து ஒரு குவியலாக அவை வளையம் போட்டன.

மெள்ள மேலே நிமிர்ந்தார்.

இரண்டு ‘பளிச்’ உடம்புகள், வில்லங்கள் இல்லாது நின்றன. பிடித்து வைத்த மேனி. கண்டினால் சுருதி அடிக்கும்.

சிங் நினைத்தார். வாசனையைக் கடந்த அவர்களது ‘டீன் ஏஜ்’ உடலின் இயற்கையான பச்சை மணம், மனத்தைக் குழைத்தது.

“சார்...” என்றாள் ஒருவள். “மெல்லிதாக ‘மசாஜ்’ செய்யலாமா?”

மெத்தை மீது பின்புறத்தை மெதுவாக இறக்கி உட்கார வைத்தாள்.

சிங்குக்கு இரண்டு மூச்சு தப்பியது.

“கொஞ்சத் தொந்தரவுதான்... ஆனா, சுகமா இருக்கும்.”

இரண்டாமவள் இப்போது மெத்தையில் உட்கார்ந்தாள்.

மேலே ‘பிரா’ விம்மிக்கொண்டு இறுகலாக நின்றது.

அதனால் முழுமையாகக்கூட மூட முடியவில்லை.

அவளது இயற்கைகள் புத்தம் புது சிகரங்களாக பூத்திருந்தன.

ஒரு பெண் தனது உள்ளங்கையைத் திறந்து, சிறு புட்டியை எடுத்தாள்.

அதன் மூடியைத் திறந்து, இரு சொட்டுகளைத் தொட்டாள்.

சிங்கின் கைகளைப் பிடித்து, முதல் 'மசாஜ்' ஆரம்பித்தாள்.

அந்தப் பெண் அதை அனுபவிக்கிறாளே! ஆச்சரியம்தான்.

அவள் கண்கள் மூடி, முகமெங்கும் சொர்ப்பனம் படிந்துவிட்டது.

அதே நேரம், சிங்கின் உள்ளே ஒரு புதுமை ரசாயனம் நிகழ்ந்து கொண்டிருந்தது.

அவரது ஆயாசம், களைப்பு, தள்ளாமைகளை மெள்ள மெள்ள கைகள் வழியே அந்தப் பெண் எடுத்துக்கொள்வது போல் தெரிந்தது.

இதற்குள் இன்னொரு பெண், மெதுவாக அவரது சட்டையை அவருக்கு நோவாமல் கழற்றினாள்!

பின்புறத்தை மென்மையாகத் தாங்கி, மெத்தையில் படுக்க வைத்தாள்.

அடுத்து அவள் கை வைத்தது அவரது தோளில்.

ஓர பசுங்குளிர் 'இச்' என்று அங்கே வீசியது.

அவரை அறியாமல் உடலெங்கும் பல புலன்கள் சிலும்பிக்கொண்டு நிமிர்ந்தன. இதற்குள் தம் மீது மெல்லிய ரப்பர் ஏதோ அழுத்துவதை உணர்ந்து கண்ணைத் திறந்து பார்த்தார்.

அவளது இயற்கைகள்தான் அவர் மீது பொருந்திவிட்டன. எவ்வளவுதான் உயரமாக வளைந்து பார்த்தாலும், அந்த இயற்கைகளில் பெரிய பரிமாணங்களை அவரிடம் இருந்து விலக்கிக்கொள்ள முடியவில்லை.

"சா... சார். நான் தள்ளி இருக்கப் பார்க்கிறேன்" என்றாள்.

சிங்கின் மனம் மெல்லிய ஐஸ் துண்டுகளாக மாறி இருந்தன.

அங்கங்கே அவை கரைந்து ஊற்ற ஆரம்பித்தன.

"என் பெயர் வனிதா, அவள் பெயர் இனிதா."

"ஓ... ரெட்டையர்களா?"



"அ... ஹ... ஹா."

இரண்டு பேர் சிரிப்பும் ஜோடியாகக் கிளம்பி மறைந்தது.

அது ஒரு முறை வெளிச்சமான உணர்வு.

"அப்படித்தான் எல்லோரும் சொல்றாங்க."

சிங்கின் மார்பில் வனிதாவின் கைகள் ஊறின.

'விரல்களை வைத்து அழுத்துகிறாளா... பிசைகிறாளா?'

இரண்டுக்கும் இடையில் ஏதோ செய்ய, அத்தனை பாகத்திலும் எழுகிறது ஒரு பரவசத் தீ!

கண்களை மூடி அதை அனுபவிக்க முடிகிறது.

வனிதா இதற்குள் மூட்டின் பக்கம் சேவை செய்ய ஆரம்பித்தாள்.

அவள் அங்கே செய்யும் விறுவிறுப்பு 'மசாஜ்' இன்னும் சிறிது நேரத்தில் மேலே ஏறிவிடும் போலிருந்தது

"சார்..." என்றாள்.

சிங் விழித்தார்.

"இன்னும் ரெண்டு நாளிலே அது கிடைச்சுடும் சார்."

"எது?"

"வெள்ளி சாமான்கள்."

"அப்படியா... நிச்சயமா?"

"எங்க முதலாளி சொல்லிட்டா உறுதிதான்."

"ஓ.கே."

"சார் ஊர் எங்கே?"

"கேரளா."

"கேரளா போல இல்லையே?"

"ஏன்?"

"பேச்சிலே அந்த வாசம் இல்லையே!"

"நான் அங்கே போய் ரெண்டு வருஷம்தான் ஆகுது."

"ஓ... இப்போ புரியுது. சாருக்கு இந்தப் பொருள் எல்லாம் எதுக்கு?

"அமெரிக்காவுக்கு அனுப்பணும்."

"வியாபாரமோ?"

"அதே."

இனிதா கேட்டுக்கொண்டிருக்க, வனிதா ஈடுபாட்டில் இருந்தாள்.

மெதுவாக அவரது தொடையில் படர்ந்துவிட்டாள். அதில் இருந்து நிறைய அவசரத் தந்திகள் மூளைக்கு விரைந்தன.

சிங் சாதாரண மனிதர் அல்ல!

எங்கே தனது சொந்த இன்பத்துக்கு அணை போட வேண்டும் என்று தெரிந்தவர்.

இதுவரை அனுமதித்தது அவரது வரம்புக்கு அதிகம் என்று தெரியும்.

எனினும் இந்தப் பெண்கள் என்ன செய்யப் போகிறார்கள்? அதைத்தான் அவர் அறிய விரும்பினார்.

இந்த அழகிகள் ரொம்பவும் பயிற்சி பெற்றவர்களாக இருக்க வேண்டும்.

இவர்கள் இங்கே வந்ததன் நோக்கம்.

வனிதா இதற்குள் அந்த வரம்புப் பக்கம் வந்துவிட்டாள்.

உடம்பில் அத்தனைக் கோளங்களும் 'குபுக்'கென்று பற்றிவிட்டன.

அதன் உணர்ச்சிகள் அவரது தலைக்குள் போய் அவரை மயக்கிடும் நேரம்.

'டக்' என்று உள்ளே ஒரு சத்தம். அது அவர் மனசு இட்டதுதான்.

வனிதா பேசிய விதம் அவரை இழுத்தது. அவரிடம் பேசும் போதெல்லாம் ஒரு கோணம் கொடுத்துப் பேசினாள்.

முகத்தைக் கோணுவது போல இருந்தது.

தவிர, இருவரும் ஒருவரை ஒருவர் மறைத்துக்கொள்ளாமல் இருந்தார்கள்.



'என்ன காரணமாக இருக்கும்?'

'மிரட்டலாமா?'

'கூடாது.'

'இந்தப் பெண்களை சாதாரணமாக நினைக்கக் கூடாது. பல விஷயங்களில் வல்லவர்களாக இருப்பார்கள்.'

"கொஞ்சம் இருங்க!" என்றார்.

எழுந்து சாய்ந்து உட்கார்ந்தார்.

"என்ன சார்?"

இப்போது சிங்குக்கு மர்மம் ஒன்று 'கிளுக்' என்று அவிழ்ந்தது.

தரையில் இரண்டு வளையங்களாக அவை கிடந்தது.

சேலைகளை அவிழ்த்துப் போட்டார்களே! அதை நோக்கித்தான் அவர்களது பார்வைக் கோணம் இருந்து வந்தது.

தான் ஒன்று நினைக்க வேறு ஏதோ நடக்கிறது. அது என்னவாக இருக்கும்?

சிங் மெல்ல எழுந்தார்.

அறையின் வாசலை நோக்கிச் சென்றார்.

"இதோ வர்றேன்" என்று கூறிவிட்டு கதவைத் திறந்தார்.

வெளியே இருபுறமும் பார்த்தார்.

வராந்தா காலியாக இருந்தது. அதில் நழுவி, அவசரமாக இடப்புற திருப்பத்தை நோக்கி விரைந்தார்.

வராந்தா திருப்பத்தின் மூலையில் அந்த 'ஷெல்பில்' போன் இருந்தது.

எடுத்தார்.

"ஹலோ" - சிறிது நேரத்தில் ஒரு தாமதக் குரல் மென்மையாகக் கேட்டது.

"உடனே 100 கொடுங்க" என்றார்.

கேட்டவளுக்கு சந்தேகம். திரும்பக் கேட்டுக்கொண்டாள்.

# 13

திரும்பி வந்தபோது அறை காலியாக இருந்தது.

"வனிதா, இனிதா" என்றார்.

எதிரொலிதான் திரும்பியது.

அரைக் கணம் அந்த ஏமாற்றம் அவரை அரித்தது. சுற்றிலும் பார்த்தார். கட்டிலுக்கு அடியில் குனிந்தார். அலமாரியைத் திறந்து பார்த்தார்.

பின்னர் அவரே தவித்துத் தவிடாக நிற்கும்போது, மெல்லிதாக ஏதோ சலனம்!

'ஆ... பாத்ரூம் விடுபட்டதா?'

'அவசரம் என்றால் அப்படி என்ன கண் மறைப்பு.'

பாதங்களை மெள்ள வைத்துப் போய் திறக்க...

உள்ளே எழுந்த அந்த 'கிளுக் கிளுக்' அவரைக் கேலி செய்வது போல் இருந்தது.

பெண்கள் இருவரும் வெளியே பிதுங்கி வந்தார்கள். முகம் எல்லாம் புன்னகை ராஜ்ஜியம். மேனிகளில் ஒரு ஆனந்தப் பரவசம்.

ஆடையோ, மேலே ஒரு அல்பம். கீழே ஒரு சொல்பம்.

'சிருக்' என்று அவர்களது பளீர் சிரிப்புக்கு இணங்க, உடம்பின் அத்தனை வளைவுகளும் நெளிந்து கொடுக்க,

சிங் ஏதோ அசட்டுப் பட்டம் கட்டியவர் போல், முகமெல்லாம் வியர்வையில் வெண்கலமாக, ஒரு பிராந்தன் விழிப்போடு அவர்களைப் பின்பற்றினார்.

"சார்! இப்படித் திடீர்னு எழுந்துட்டீங்களே... என்ன?" என்று கேட்டாள் இனிதா.

சிங் மெத்தையில் அமர்ந்தார்.

மெள்ள மெள்ள அவரது சுயரூபம் திரும்பிக் கொண்டிருந்தது. அசட்டுப் புன்னகை, சிறிது சிறிதாகத் தோய்ந்து,



"இந்தா, பொண்ணுங்களா?" என்று ஆத்திரக்குரல் வெளிவந்தது.

அவர்கள் திடுக்கிட்டார்கள்.

"முதல்லே அந்த சேலைக்குள்ளே என்ன இருக்கு?" என்றார்.

இரண்டு பெண்களுக்கும் கோடிச் சிரிப்பு வந்தது.

"இது கூடத் தெரியாதா?" என்று சொல்லிச் சிரித்தாள் இனிதா.

"இந்தா..." என்றார் சிங்! கண்கள் உருட்டிக்கொண்டு பார்த்தவர், "நீங்க நான் சொல்ற கேள்விகளுக்கு சரியா பதில் சொல்லாட்டா, உங்களை 'லாக்–அப்'பிலே தள்ளிடுவேன்" என்று கூறி, அடையாள அட்டையை எடுத்துக் காட்டினார்.

வனிதாவின் முறுவல் உடனே அழிந்தது. இனிதாவுக்கு சற்று [illegible].

சமாளித்துக்கொண்டு இரண்டாமவள், "ஏன் இப்படி பேசுறீங்க?" என்றாள், பாதி கரிசனத்தோடு.

"பதில் சொல்லுங்க. உங்க முதலாளி ஏன் இங்கே உங்களை அனுப்பிச்சார்?"

"உங்களுக்கு 'மசாஜ்' கொடுக்க..."

"அதெல்லாம் தெரியுது. அதை ஒரு காரணமா வைத்து வேறு ஏதாவது செய்யச் சொல்லி இருக்காங்க. அது என்னது?"

"சார்... 'மசாஜ்' தவிர வேறே எதுவும் சொல்லி அனுப்பலை."

"பொய் சொல்லாதே."

அருகே இனிதா வந்தாள். "நீங்க விருப்பப்பட்டா உங்களுக்கு துணை கொடுக்கும்படி சொல்லி அனுப்பிச்சாங்க."

"துணைன்னா என்ன துணை?"

"அதை நீங்க என்ன வேணாலும் எடுத்துக்கலாம்."

"ஓ... அப்படியா! இதனாலே அவருக்கு என்ன லாபம்?"

"வாடிக்கையாளர் திருப்தி."

"ஓ... இப்படித்தான் திருப்திப்படுத்தறதா?"

அவர்கள் பேசவில்லை.

"இந்தா பாருங்க! நீங்க உண்மையைப் பேசலை. என்னவோ உள்நோக்கத்தோடு இங்கே வந்திருக்கீங்க... அதைச் சொல்லிடுங்க."

"சார், அதுதான் சார்."

"சரி! இங்கே இப்படிக் கேட்டா, நீங்க சொல்லமாட்டீங்க. 'லாக்-அப்'பிலே ஒரு வாரம் தள்ளிட்டுக் கேட்டா, தானா பதில் சொல்வீங்க. இப்போ போலீஸ் வேனை வரவழைக்கிறேன் பாருங்க."

போனை எடுத்தார்.

"சார்... சார்."

இனிதா இடைமறித்தாள்.

இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்தார்கள்.

"ம்... சொல்லுங்க" என்றார், கோபத்துடன்.

"வாடிக்கையாளர் உண்மையானவரான்னு தெரியறதுக்குத்தான் சார்."

"ஓகோ! எப்படிக் கண்டுபிடிப்பீங்க?"

"இங்கே வந்து பேசிக் ஈசி கண்டுபிடிச்சுடுவோம் சார்."

"பேசினாப் போல தெரிஞ்சுடுமா?"

"அப்படித் தெரியாட்டா, 'மசாஜ்'லே அவரைக் குப்புறக் கவிழ்க்க வைப்போமில்லே?"

"ஆமாம்"– இது அடுத்தவள்.

"அப்போ எங்க ரெண்டு பேர்லே ஒருத்தி போய் பெட்டியைக் கிட்டியைக் குடைஞ்சு கண்டுபிடிச்சுடுவாங்க."

"சரி! நீங்க சம்பளம் வாங்கி வேலை செய்யறவங்கதானே?"

"ஆமா."

"நீங்களும் என்னோடு சேர்ந்துக்கிட்டு உங்க முதலாளிக்குத் துரோகம் செய்ய முடியாதா?"



இனிதா இடுப்புக்குக் கீழ் ஒரு நெளிசல் கொடுத்தாள்.

"அது மாதிரி துரோகம் செய்யமாட்டோம்."

"நீங்க மாட்டீங்க. அவர் எப்படி நம்புவாரு?"

"அதுக்கு..." என்று வனிதா ஏதோ சொல்ல வந்தாள். நிறுத்திவிட்டாள்.

'இரண்டு பேரில் இவள்தான் அதிக வெளிப்படை"– அவள் [illegible] முறுக்கிச் சொல்வது அழகாக இருந்தது.

'எதையோ மறைக்கிறாள்?'

இனிதா உதவ வந்தாள். "எங்க முதலாளியும் உங்களை மாதிரி சார். கேள்வி கேட்டுக்கேட்டே உண்மையை வரவழைச்சிடுவாரு."

இன்னும் வனிதாவின் முறுக்கல் நிற்கவில்லை. அது அவள் [illegible] அகலம் என்பதைக் காட்டியது. 'டீன் ஏஜ்' வேறா? தளிர் நிறத்தில் அது மயக்கம் நிறையக் கொடுத்தது.

"சரி, எங்கிட்ட... பேசும்போது, முகத்தை அந்தப் பக்கம் திருப்பிப் பார்த்தீங்களே... எதுக்கு?"

ஒரு சின்ன வியப்பு அலை அவர்களை அமுக்கியது.

"அதுங்களா?" என்று வனிதா இழுக்க, சிங் உண்மை வரும் என்று நினைத்தார்.

இனிதா உடனே இடையில் குதித்தாள். "சார்! நாங்க இந்த வேலைக்கு வர்றோமே தவிர, எங்களுக்கும் ஆசாபாசம் உண்டு சார்."

சிங் ஒரு விசேஷப் பார்வையைத் திருப்பினார்.

'ஒவ்வொரு வாடிக்கையாளர் உடம்பும் ஒவ்வொரு மாதிரி இருக்கும். ஒருத்தருக்குத் தேம்பலா இருக்கும், மற்றொருத்தருக்கு ஏதாவது தோல் நோய் இருக்கும். ஒருத்தருக்கு வியர்வையா [illegible]'

சிங் யோசித்தார். 'தமக்கு அதுபோல் ஏதாவது இருக்கிறதா?'

அவர் யோசிப்பை அவள் புரிந்துகொண்டாள்.

"உங்களுக்கு அது மாதிரி எதுவுமில்லை சார். நீங்க கவலைப்பட வேண்டாம். ஆனா, பழக்க தோஷத்திலே அவள் அதேமாதிரி செஞ்சா. நானே அவளை நாசுக்காக எச்சரிச்சேன்."

"சரி... உண்மையை இப்போ சொல்லுங்க. அந்தத் திருட்டுபோன வெள்ளி சாமான்கள் விலைக்கு வந்தாச்சா?"

"உண்மையைச் சொல்றேன். இதுவரைக்கும் வரலை சார். ஆனா இன்னும் ரெண்டு, மூணு நாளிலே எப்படியும் வந்துடும்னு எதிர்பார்க்கிறாங்க– எங்க முதலாளி ஷா மட்டுமில்லை... இந்தத் தொழில்லே இருக்கிற அத்தனை பேரும்."

"இது உண்மைதானா... நிச்சயம் நம்பலாமா?"

"சத்தியமா சார்."

"இந்தாப்பாருங்க! உண்மை இல்லைன்னா அப்புறம் கடையிலே வந்தே கைது பண்ணுவேன்."

"சத்தியம் சார்."

"சரி... நீங்க போங்க. நல்ல வாடிக்கையாளருன்னு சொல்லுங்க."

"எஸ் சார்."

அவர்களாவது, அப்படிச் சொல்வதாவது! சிங்குக்கு அது தெரியாதா? வெறும் வார்த்தைக்கு அப்படிச் சொன்னார்.

இருவரும் அவசர அவசரமாக சேலைகளை உடுத்தினார்கள்.

பெரிய புன்னகையோடு கும்பிடு போட்டார்கள்.

ரகசிய கதவைத் திறந்து மறைந்தார்கள்.

## 14

லிங்க், வாசலில் காத்திருந்தான்.

சிங்கின் அவசரச் செய்தி கேட்டு வந்திருந்தான். மேலே 808–க்கு எந்த விநாடியும் போகத் தயாராக இருந்தான்.





[illegible] 'கிளு கிளு' என்று பேசிக்கொண்டு இரண்டு இளசுகள் [illegible] நடையாக வெளியே வந்தன.

[illegible] கண்கள் குத்திக்கொண்டு நின்றன.

[illegible] முன் சதுக்கத்தில் 'மெர்க்குரி' விளக்கு. கீழே இரண்டு [illegible]களாக அவர்கள் வெளியே வந்தார்கள்.

'[illegible]' என்று ஆனந்த ஒலிகள் ஒவ்வொரு வார்த்தையிலும் [illegible] வந்தன.

[illegible] சுவாசம் உள்ளே போனது வெளியே வரவில்லை.

"[illegible] வாத்தியாருக்கு செம விருந்து கிடைச்சிருக்கும் [illegible] இருக்கே?" என்று உள்ளே ஒரு குறும்புக்கார லிங்க் [illegible].

அவர்களைப் பார்க்கும் ஒவ்வொரு தடவையும் 'பைனாகுலர்' எடுத்து 808 அறை ஜன்னலுக்கு 'போகஸ்' செய்தான்.

'[illegible] ஏதாவது சமிக்ஞை செய்கிறாரா?'

[illegible] அந்தக் 'கார்' பகுதியை அணுகினார்கள்.

[illegible] சகல மனமும் தத்தளித்தது.

'[illegible] காமம் மிதந்து வருமா?'

'[illegible]... ஆளை வசீகரிக்கும் மாயசக்தி உண்டா?'

[illegible]தால் அவர்களது ஒவ்வொரு வார்த்தையும் [illegible] உள்ளே ஏதோ செய்தது.

[illegible] வேலை எல்லாவற்றையும் விட்டுவிட்டு அவர்களது [illegible] ஏறிப் போய்விடுவோமா என்று நினைத்தான்.

[illegible] மேலே ஜன்னல் 'சமிக்ஞை' அவனை இழுத்தது.

[illegible] இரண்டு முறை விளக்கை அணைத்துவிட்டு ஏற்றினார்.

[illegible] இன்னொன்று, ஒரு நொடி தயக்கம்.

அவர்கள் கார் அப்போது கிளம்பியது.

[illegible] 'திடு திடு' என்று [illegible].

[illegible] பிடித்து, மேலே நழுவினான்.

808–ன் கதவைப் 'பளார்' என்று திறந்து உள்ளே போக, சிங் நிதானமாக அவனைப் பார்த்தார்.

அவன் சுவாசம் அடங்கச் சிறிது நேரம் ஆயிற்று.

"லிங்க்! அசம்பாவிதம் எதுவும் நிகழலை. அந்தப் பொண்ணுகளைப் பார்த்தியா?"

"பார்த்தேன்."

"ரெண்டு பேரும் ஒண்ணுபோல இருக்காங்க."

"ம்... அந்தக் கடையிலே வேலை செய்யறாங்க" என்று சொல்லி நடந்ததை எல்லாம் விவரித்தார்.

இவன் யோசனையோடு நின்றான்.

"என்ன யோசிக்கிறே... லிங்க்?"

"எனக்கு ஒரு சந்தேகம்."

"என்ன?"

"நீங்க பேசினதெல்லாம் 'ரிக்கார்ட்' ஆகி இருக்கணும்."

"அப்படியா... பதிவாகி இருக்குமா?"

"இருக்கலாம். நீங்க என்ன பேசினீங்க?"

"மிரட்டினேன்."

"அதுவும் பதிவாகி இருக்கும்."

"சரி லிங்க். அந்தப் பெண் கட்டில்லே இங்கே உட்கார்ந்தா? அவள் முகத்தின் கோணம் இந்தத் திசையிலே திருப்பி இருந்திச்சு."

"இங்க..." லிங்க் எழுந்தான். அந்தத் திசை முழுவதும் கண்ணைச் சாடவிட்டான்.

"லிங்க், எனக்கு ஒரு யோசனை. அந்தக் கருவி அவங்க சேலையிலே மறைஞ்சு இருக்கணும். இப்போதான் அது புத்தியில் தோணுது."

"சரி சார். சேலையை நீங்க பார்க்கலையா?"

"பார்த்தேன். ஆனா, கட்டிலுக்கு வரும்போதே சேலையை அவிழ்த்துக் கீழே போட்டுட்டாங்க."



"அப்படியா?" என்று லிங்க் யோசனையில் ஆழ்ந்தான்.

"எனக்கு இப்போ தோணுது. அந்தச் சேலைக்குள்ளேதான் ரகசிய கருவி இருக்கணும்."

"ஆமாம் சார்."

"அவ முன்னாலே அவிழ்த்துப் போட்டாச்சுன்னா, நாம அவள் உடம்பைப் பார்த்து இளிச்சிட்டிருப்போம்... சேலைக்குள்ளே என்ன இருக்குன்னு கண்டுபிடிக்க மாட்டோம்."

"ஏன் சார். அப்போ நீங்க சேலையைச் சோதனை பண்ணலையா?"

"இல்லையே."

"போகும்போது கூடவா?"

"இல்லை."

"லிங்க்..."

பாதி ராத்திரி ஓடி இருந்தது. இருட்டு ஒரு கனத்த போர்வையாக எங்கும் படர்ந்தது. பூமி வெகு நிசப்தமாகிவிட்டது.

"இந்தா லிங்க்" என்று சட்டென்று எழுந்தார் சிங்.

'தட் தட்' என்று காலை வைத்து கழிவறையை அடைந்தார். உள்ளே எட்டிப் பார்த்தார்.

'பிளஷ் அவுட்' மூடியைத் திறந்து பார்த்தார். சின்ன 'கம்பார்ட்மெண்ட்'டைத் திறந்தார்.

"[illegible] லிங்க்."

"எஸ் சார்."

"[illegible] குச்சி ஏதாவது இருந்தா கொண்டு வா."

லிங்க், அறைக்குள் தேடினான்! குடைந்தான். அலமாரியில் ஒரு பழைய 'ஸ்கேல்' இருந்தது. அதை எடுத்துக்கொண்டு ஓடினான்.

சிங், ஸ்கேலை வாங்கி அருகில் உட்கார்ந்தார். வெள்ளை வெனீர் என்று பேனிலும், அதன் ஓரத்தில் துவாரமும் தெரிந்தது.

துவாரத்தில் நீல நிறத் தண்ணீர், வட்டமாக அமர்ந்திருந்தது.

துவாரத்தில் ஸ்கேலைச் செலுத்தினார். கையை உள்ளே சிறிது நீட்ட வேண்டியது இருந்தது.

கண்ணை மூடி ஸ்கேல் நுனியால் எதையோ உணர்ந்துகொண்டிருந்தார்.

"அகப்பட்டாச்சு. உள்ளேதான் இருக்கு. எடுக்க முடியுமா? பாரு."

லிங்க் அவர் இடத்தைப் பிடித்தான். கைகளை மேலே வரை தூக்கினான். பிறகு, துவாரத்துக்குள் செலுத்தினான்.

"லிங்க்! உள்ளேயா கையை விடறே?"

"பரவாயில்லை சார்."

அடுத்து நீருள் மூழ்கிய இரு விரலுள்– எதையோ பிடித்து வெளியே இழுத்தான். தரை மீது வைத்தபோது 'பாலித்தீன்' பை ஒன்று இறுகக் கட்டி இருப்பது தெரிந்தது.

"உள்ளே என்னவோ?"

லிங்க் அதைத் திறக்க, அது வெளிநாட்டுக் கருவி. அப்போதுதான் பிறந்தது போல் சுத்தம், மெறுகு, மினுமினுப்புடன் இருந்தது.

"இது ரகசிய கருவிதான்" என்றார், சிங்.

லிங்க் கையைக் கழுவிவிட்டு வந்தான். "இவ்வளவு சின்னதா இருக்கே சார்?" என்றான்.

"பார்த்தா சின்னதா இருக்கு! பத்து மைலுக்கு பல செய்தியை ஒலிபரப்பும்."

"நாம பேசறது துல்லியமாக கேட்குமா, சார்?"

"கேட்கும். பார்த்தியா லிங்க். நான் மிரட்டின உடனே, இதைத் தூக்கி 'கப்போர்ட்'லே போட்டுட்டாங்க! இல்லாட்டி பிடிச்சுடுவேன்னு பயம். அந்த ஆளைக் கண்காணிக்க யாரையாவது போடணும் லிங்."

"எஸ் சார்."

"அப்புறம் இந்தப் பெண்கள். இவங்க யாரு... எங்கே



இருக்காங்க?"

"எல்லாத்தையும் கவனிக்கிறேன் சார்."

"நீ கவனிப்பே... தெரியும்."

## 15

சிங் நினைத்தார். தாம் அந்த விவகாரத்தை நடத்தியது அவ்வளவு சரியல்ல. அதை வேறு முறையில் கையாண்டு இருக்க வேண்டும்.

கடைக்காரர்கள் இப்போது உஷாரராகி இருப்பார்கள். மற்ற அந்தரங்க உளவுக்காரர்களையும் உஷார்படுத்தி இருப்பார்கள்.

எனவே, இப்போது மட்டுமல்ல... இன்னும் நீண்ட காலத்திற்கு அந்தத் திருட்டுப் பொருள்கள் வெளிவர வாய்ப்பு இல்லை.

அதனால் திருட்டைக் கண்டுபிடிக்கும் ஒரு சுலப வழி மூடப்படுகிறது.

சிங் தினமும் ஆவலோடு காத்திருந்தார்.

'ஏதாவது செய்தி வருமா? எங்கேயாவது சிறு தடயம் கிடைக்குமா?'

லிங்க் ஒவ்வொரு தகவலாகக் கூறிக்கொண்டிருந்தான்.

"கடையின் சொந்தக்காரர் ஷா வெளியே போவதில்லை. போன் அதிகம் உபயோகிப்பதில்லை. கடையில் வைத்திருக்கும் பொருள்கள் அனைத்தும் சட்ட வரம்புக்கு உட்பட்டவைகள்.

ஆனாலும் எங்கேயாவது அவர் ரகசிய முறையில் வியாபாரம் நடத்தத்தான் வேண்டும். அது இதுவரை தெரியவில்லை.

அந்தப் பெண்கள் இருவரும் நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள். ஷாவிடம் வேலையில் இருக்கிறார்கள். சுதந்திரமாக உடல் வனப்பை விற்கிறவர்கள். ஷா அவர்களை நன்றாகப் பயன்படுத்திக்கொண்டு, நிறைய பணமும் கொடுத்து வருகிறார்.

தனகோடி கொலைக்கும், ஷாவுக்கும் இதுவரை எந்தத் தொடர்பும் கிடைக்கவில்லை. இதேபோல் பல சந்தேக நபர்களைப் பற்றியும் செய்திகள் வந்தன. எங்கேயும் துளி தகவல் பெயரவில்லை."

சிங்குக்கு கலக்கமாக இருந்தது.

'என்ன... சுலபமாக நினைத்தோம். ஆனால், அது எவ்வளவு ஆழமாக இருக்கிறது.'

'லிங்க் ஒரு நல்ல அறிவாளி. இந்த வழக்கில் என்னவோ மர்மம் இருக்கிறது என்று எவ்வளவு தீர்க்க தரிசனமாக கூறிவிட்டான்.'

'மர்மம்... மர்மம்... மர்மம்.'

'இதை உடைத்து உண்மையைக் கண்டுபிடிப்பது எப்படி?'

காலையில் அவருக்கு இருப்புகொள்ளவில்லை.

'எவ்வளவு வாரங்கள் ஓடிவிட்டன... விசாரணைகள் எத்தனையோ நடந்துவிட்டன. ஆனால், வழக்கு நகரவில்லையே?'

ஸ்கூட்டரை எடுத்துக் கிளம்பினார்.

முகத்தைக் குளிராக்கியது இளங்காற்று. வெளி உலகக் காட்சியே அவருக்கு தெம்பாக இருந்தது.

தெருக்கள், சாலைகள் என்று போன பிறகு, ஸ்கூட்டர்– ராயல் கோர்ட் இருக்கும் இடத்தைத்தான் அணுகியது.

அப்பார்ட்மெண்டு அப்படியே இருந்தது.

ஒரு போலீஸ் காவல் அங்கே நிரந்தரமாக தெரிந்தது.

சிங்கைக் கண்டதும் 'சல்யூட்' அடித்து, அவர் கதவைத் திறந்துவிட்டார்.

சிங்குக்கு எப்போதுமே ஒரு எண்ணம் உண்டு. குற்றம் நடந்த இடத்தைப் பல முறை பார்க்க வேண்டும்.

உள்ளே நுழைந்தார்.

பழ வாசனை அதற்குள் வந்துவிட்டது.

உள்ளே அன்று எப்படி இருந்ததோ... அப்படியே காட்சி



இருந்தது. எந்த மாறுதலும் இல்லை.

அது மட்டுமல்ல... மறு உலகில் நுழைந்த மாதிரி கூட!

உள்ளே வியாபித்து இருந்த எதுவோ அவர் மனத்தைப் பிடிப்பதாக இருந்தது. அது என்னவாக இருக்கும்? வெறும் பிரமையாக இருக்குமா?

அறைக்குள் சென்றார். புழுதி பரந்து கிடந்தது. எங்கேதான் இடுக்குகள் கிடைத்து அவை உள்ளே வந்து உதிருமோ? கப்போர்ட், மேசை டிராயர்!

மேசை முன் உட்கார்ந்தார். டிராயரை இழுத்தார். எத்தனையோ கடிதங்கள் இருந்தன. முன்னாலேயே ஒவ்வொன்றாகப் பார்த்து வாசித்ததுதான்...! சொந்தங்களே இல்லை. எல்லாம் சாதாரண நடைமுறைக் கடிதங்கள்.

திரும்ப ஒரு முறை பார்த்தார்.

ஒவ்வொரு கடிதமாகப் படித்தார். எல்லாவற்றையும் பார்த்தார்.

நினைவு ஓடியது. நெற்றியிலே கை வைத்தார்.

ஏதோ நெருடல்!

மனசு எதையோ பிடிக்க நினைத்து, பிடிக்க முடியாமல் நழுவியது. ஆனால், எதுவோ ஒன்று நழுவிக்கொண்டே இருப்பது தெரிந்தது.

கைகளை அழுத்திவைத்து, கண்களை மூடிவிட்டார்.

நினைவுகள் ரெயில் பாதைகள் போல பின்னிக்கொண்டு ஓடின.

இங்கும், அங்குமாகச் சிதறின.

மனத்தின் அடியில், நினைவின் ஆழத் தளத்தில் ஏதோ கனன்றுகொண்டிருந்தது.

'மேலே எடு.'

'அதை முதலில் மேலே எடு.'

'இதோ... இதோ...'

சட்டென்று ஒரு பெருமூச்சு விட்டுக்கொண்டு நிமிர்ந்தார்.

'ஆ! புரிகிறது. இத்தனை கடிதங்கள் வந்திருக்கின்றன. பல இடங்களில் இருந்து...

ஒன்றுகூட உறவினர் யாரிடம் இருந்தும் வரவில்லையே!'

'தனகோடிக்கு உறவே கிடையாதா?

தாய்– தந்தை, மாமன் என்று யாரும்!

மணமே ஆகவில்லையா?

மணமானால் மனைவி எங்கே?

மனைவி இல்லாவிட்டால், அவர்கள் குடும்பம் எங்கே?'

எண்ணங்கள் 'பளிச் பளிச்' என்று வந்தன.

தனகோடிக்கு யாரும் இல்லாதது ஒரு ஆச்சரியம்தானே!

'ஆமாம்.'

இன்ஸ்பெக்டர் சதாசிவம் கூறியதுகூட நினைவுக்கு வந்தது.

'சார் இவ்வளவு பெரிய மனுஷனுக்கு ஒருத்தர் உறவில்லை. அவரது சடலத்தை யாரும் பெற்றுப் போகவில்லை.

போலீசார்தான் அதைப் புதைக்க வேண்டியது வந்தது. லட்சாதிபதியோ, கோடீஸ்வரனோ... கடைசியில் அவர் கதி இப்படியா?'

ஆக... தனகோடிக்கு ஒரு பழைய காலம் இருந்திருக்க வேண்டும். அப்போது அவர் எங்கே இருந்தார்... என்ன செய்தார்?

இந்த ஆவல் வந்தவுடன், சிங் அந்த வீட்டின் எல்லா முக்கு மூலைகளையும் ஆராய்ந்துவிட்டார்.

ஒரு அலமாரியைக்கூட விடாமல் திறந்து பார்த்தார்.

காகிதத்தையும் விடாமல் பிரித்து பார்த்தார். ஆடைகளை எடுத்து கீழே போட்டு, அதில் ஏதாவது கிடைக்கிறதா? என்றும் பார்த்தார்.

இரண்டு மணி நேர சோதனைக்குப் பிறகு முழுதும் களைத்து போய் வெளியே வந்தார்.

பலன் பூஜ்ஜியம்!



காவலாளியிடம் தலை ஆட்டிவிட்டு நடந்தார்.

கால்கள் விரக்தியில் பின்னின.

மனம் ஏனோ நொடிந்து விழுந்தது.

எப்போதாவது அழ வேண்டும் என்று நினைத்தாரா? அது இப்போதுதான்!

லிப்டை அணுகும்போது அதைத் திறந்து, அந்தப் பெண சிநேகா உள்ளே வந்தாள்.

சிங்கை ஓரக் கண்ணால் ஒரு பார்வை அடித்துவிட்டு, அமைதியாக நழுவிப் போனாள்.

சிங் லிப்டில் ஏறி கதவை அடைந்தபிறகு, அவள் தனது அபார்ட்மென்டைத் திறக்கும் சத்தம் கேட்டது.

அந்த நேரத்தில் சிங்கின் மனத்தில் எந்த நினைவும் தோன்றவில்லை.

எந்திரத்தனமாக கீழே இறங்கி, வெளியே வந்தார்.

ஸ்கூட்டரில் ஏறினார்.

பாதிச் சலிப்பாக உதைக்கப் போனார்.

"சிங்! சிங்!" என்று குரல்.

திரும்பினார்.

சூரி ஒரு ஸ்கூட்டர் ஆரூடனாக அருகில் சறுக்கி நின்றான்.

பழைய நாளைய நண்பன்.

"இங்கே என்ன துப்பு துலக்கிட்டுப் போறே?" என்றான்.

"இங்கேயா?" என்று 'யா'வை இழுத்துவிட்டு– ஒரு உதை கொடுத்து ஸ்கூட்டரைக் கிளப்பினார்.

"எங்கே போறே சூரி?"

"நான்தான் சினிமா பைத்தியம் ஆச்சே... போறேன்."

"எங்கே?"

"ஒரு ஆங்கில படம். வர்றியா?"

சிங்கின் நினைவு பாதியும் சுருண்டுகொண்டிருந்தது. எதிலும் தங்கவில்லை.

"என்ன சொல்றே? மந்தமா இருக்கியே! வரமாட்டியா?"

"வர்றேன்ப்பா. கொஞ்சம் பொழுது போக்கணும்."

"வா."

பெரிய தியேட்டர். கண்ணாடி மயமாக சுவர்கள்.

மேல் வகுப்பில் சில்லென்று குளிர்.

சிங் பாதி ஆர்வத்தில் பார்த்தார்.

விளம்பரங்கள் வரிசையாக வந்தன. நெற்றியில் கை வைத்து அரைக் கண்ணால் பார்த்துக்கொண்டு வந்தார்.

ஐந்தாறு விளம்பரங்கள் போனதும், ஒரு குளியல் சோப்பு விளம்பரம் வந்தது.

சுருக்கென்று ஒரு தைப்பு.

நிமிர்ந்தார்.

'யார் அது... அந்தப் பெண்ணா?'

'ஆமாம். அவள்தான்! அந்த இரண்டாம் தள அபார்ட்மென்டுக்குப் போனாளே?'

'மாடலிங்' செய்பவள் என்று லிங் கூறி இருந்தான்.

ஆச்சரியம்!

அந்தப் பின்னணிகள் அவருக்கு ஏற்கெனவே பரிச்சயமானவை. எங்கே பார்த்திருக்கிறார் அவர்களை?

'கம்ப்யூட்டர்' போல் துரித நினைவு தோன்றும், சிங்குக்கு! ஆனால், இன்று எல்லாம் மழுங்கியே தோன்றின.

கண்களைக் கொட்டினார். 'ஆ... இதோ நினைவு வந்துவிட்டது.'

'இது தனகோடியின் வீட்டில் எடுத்த விளம்பரப் படமா?'

'சீ... அவர் வீட்டில் இருக்காது. அப்படியானால்... ஓ, இது அந்தப் பெண் சிநேகா வீட்டில் எடுத்திருக்க வேண்டும்?'

'எல்லா அபார்ட்மென்டும் ஒரே விதத்தில் கட்டப்பட்டவை ஆயிற்றே!'

'சிநேகா வீட்டில் இது எடுக்கப்பட்டு இருக்கிறது.'



'அடடே... இது என்ன?'

சிங் உற்றுப் பார்த்தார். ஒரு சித்திர வேலை செய்த அழகான வெள்ளி பேலாவில் வெண்மையான கொழுத்த சோப்பு திரவத்தை யாரோ பாயசம் ஊற்றுவது போல் ஊற்றினார்கள்.

"அந்தச் சித்திர வேலை பேலா?"

சிங்கின் மனம் மீண்டும் நெருடியது.

'ஆ... அதை எங்கே பார்த்தோம்? ஆமாம்! நினைவு வந்தது. அந்தக் கோசல்ராமின் விற்பனைப் பட்டியலை லிங் கொண்டு வந்து கொடுத்திருந்தானே.'

'அதில் அந்தப் பேலாதானே இருந்தது.'

அதே விநாடியில் சிங்கின் சோர்வு களைப்பு ஆயாசம் எல்லாம் ஆகாசத்தில் பறந்துவிட்டன.

சட்டென்று நிமிர்ந்து உட்கார்ந்தார்.

படத்தைப் பார்ப்பதாக பாவனை செய்தார். ஆனால், அந்த இரண்டரை மணி நேரம் வரை, மனசு பல தடங்களில் ஓடியது.

"என்ன... ஜோரா இருந்திச்சா?" என்றான் சூரி, படம் முடிந்தவுடன்.

'பர்ஸ்ட் கிளாஸ்' என்றார், சிங்.

இருவரும் வெளியே வந்ததும் விடைபெற்றார்கள்.

சிங் உற்சாகத்தோடு ஸ்கூட்டரை ஓட்டினார்.

## 16

"நீங்க எனக்குச் சொல்லி ஆகவேண்டும்" என்றார் சிங், அழுத்தமாக.

அவர் கண்ணில் சுடர் ஒன்று ஒளிவிட்டு மறைந்தது.

சிநேகா பதைத்துக்கொண்டிருந்தாள். அவளது இளம் நெஞ்சு மேடும், இறக்கமுமாக ஓடியது.

"இல்லை சார். எனக்கும், அவருக்கும் தொடர்பே கிடையாது" என்றார், கீச்சுக் குரலாக.

"அதை அன்னிக்கே நீங்க சொல்லிட்டீங்க. அது உண்மையில்லை. நான் நிரூபிக்கட்டுமா?"

"செய்யுங்க."

"சோப்பு விளம்பரத்திலே நீங்க நடிச்சிருக்கீங்க இல்லே."

திகைத்தாள். புருவத்தின் அருகே சுருக்கம். 'ஏன் இதைக் கேட்கிறார்?'

"ஆமாம்."

"அதிலே ஒரு வெள்ளி பேலா வருது தெரியுமா?"

'சுர்' என்று நினைவு தைத்தது.

"ஆமா" என்று பாதி வார்த்தைகளை உடைத்து நிறுத்தினாள்.

"அது ஒரு பழமையான வெள்ளிச் சாமான். எனக்குத் தெரியும்."

அவர் கண்கள் கொட்டிக்கொண்டு அவளைப் பார்த்தன.

"அது வேற யார்கிட்டேயும் கிடைக்காது. தனகோடிகிட்டே மட்டும் உண்டு."

சிங் ஒரு போடு போட்டார்.

அவளால் பதில் பேச முடியவில்லை. திகைப்பில் இருந்தாள்.

"சிநேகா, வீணாக மறைக்காதீங்க. அதுவே பெரிய குற்றமாயிடும்."


அவள் தலை குனிந்தாள்.

'லபக்'கென்று விம்மல்கள் நெஞ்சை உடுருவின.

"சொல்லப்போனா, சிநேகா... இதிலே நீங்க பொய் சொல்ல வேண்டிய அவசியமே இல்லை."

"இருக்கு சார். அவசியம் இருக்கு" என்றாள், ஆத்திரத்துடன்.





"என்ன... சொல்லுங்க."

அவனிடம் சில விசிப்புகள் வந்தன. பிறகு, மூக்கை துடைத்துக்கொண்டு, "தனகோடி அப்படிச் சொல்லி இருக்கார்" என்றார்.

"தனகோடியா?"

"ஆமாம். உங்களுக்கு ஒரு கடிதம் பார்க்கணுமா?"

"சம்பந்தம் இருந்தா பார்க்கிறேன்."

எழுந்தான். இடுப்பைச் சுழற்றிக்கொண்டு, மேஜையை நோக்கி போனான்.

அதன் இரண்டாவது டிராயரைத் திறந்து, ஒரு கடிதத்தை முக்கியத்துவம் அதிகம் கொடுத்தது போல எடுத்து வந்தான்.

சிங் அதை வாங்கினார். திறந்து படிக்க ஆரம்பித்தார்.

அன்பார்ந்த சிநேகாவுக்கு,

'என்னால் என் மனசை அடக்க முடியவில்லை. என்னைத் தவறாக நினைக்காதீர்கள். என் மாலினியின் சாயல் தென்பட்டதால் இதை எழுதினேன். என்றைக்காவது சந்தித்து உங்களிடம் பேச விரும்புகிறேன்.'

இப்படிக்கு,
உன் அங்கிள்
தனகோடி.

சிங் உடனே கடிதத்தின் தேதியைப் பார்த்தார். ஒரு வருடத்திற்கு முன்னால் எழுதப்பட்டிருந்தது.

"யார் இந்த மாலினி?"

"தெரியாது."

"ஏன், நீங்க தனகோடியைப் பார்க்கலையா?"

"பார்த்தேன்... பயந்துகிட்டே பார்த்தேன்."

"ஏன்?"

"என்னை சிநேகமாக்கிக்க இது ஒரு யுக்தியோன்னு நினைச்சேன்."



"அப்புறம்?"

"அந்த மனிதர் அதற்குப் பிறகு என்னைப் பார்க்க எந்த முயற்சியும் எடுக்கலை சார்."

"சரி..."

"அதுவே அவரை உன்னதமா காட்டிச்சு. நானே ஒரு மாதத்துக்கு அப்புறம் அவரைப் பார்க்கப் போனேன்."

"தவறாக நடந்துகிட்டாரா?"

"இல்ல... அவரை மாதிரி என்னிடம் மரியாதையா நடந்துகிட்டவர் யாரையும் நான் பார்க்கலை."

"என்ன சொன்னார்?"

"என்னை ரொம்ப மரியாதையாகப் பேசி வரவேற்றார். மாலினி யாருன்னு கேட்டேன். கண்ணிலே நீர் வந்துட்டுது."

"காதலியா, மனைவியா?"

"எவ்வளவோ கேட்டுப் பார்த்தேன். 'தயவு செய்து அதை மட்டும் கேட்காதே சிநேகா. என் மனசிலே அதைப் பூட்டி வச்சாச்சு. திறக்கமாட்டேன். திறந்தா அத்தனையும் சோகமாகப் போயிடும்னார்..."

"ம்..."

"நானும் அப்புறம் கேட்கிறதை நிறுத்திட்டேன்."

"அவர் வீட்டுக்கு அடிக்கடி போனீங்களா?"

"போனேன். அவர்கிட்டே இருந்து ஏதோ ஒண்ணு எனக்குள்ளே இரக்கத்தை வரவழைச்சுது. நானாகவே போனேன். சில நேரத்தில் வீட்டிலே செஞ்ச எதையாவது அவருக்குக் கொடுக்க எடுத்துட்டுப் போவேன்."

"ஓ... அவரும் உங்க வீட்டுக்கு வருவாரா?"

"ஒரே ஒரு தடவைதான் வந்திருக்காரு."

"சரி! தன் குடும்பத்தைப் பற்றி அவர் எப்போதும் சொன்னதில்லையா?"

"இல்லவே இல்லை."

"அதைப் பற்றி பேசக்கூட வராதா?"

"வரும். வந்தா பிரமை பிடிச்சது போல பார்ப்பாரு. கண்ணிலே நீர் வந்திடும். தொண்டை அடைச்சுக்கும்."

"வீட்டுக்கு சொந்தக்காரங்க யார் வந்ததையும் நீங்க பார்த்ததில்லையா?"

"இல்லை."

"அவர் எந்த ஊர்லே இருந்து வந்திருக்கிறதா சொன்னார்?"

"அதுவும் இல்லை."

சிங் யோசித்தார். வழக்கு இன்னும் அவிழாத புதிராகத்தான் தெரிந்தது.

அதன் அத்தனை முடிச்சுகளும் இறுகியே இருந்தன.

"ரைட் சிநேகா. மாலினி என்பவள் மாதிரி நீங்க இருக்கிறதாகச் சொன்னாரில்லையா?"

"ஆமாம். அசப்பிலே அப்படின்னாரு."

"மாலினி" என்று முனகினார். யோசனையில் சிறிது இருந்தார்.

"இவ்வளவு சொல்லிட்டே சிநேகா. அவரை யார் கொன்று இருப்பாங்கன்னு தெரியுதா?"

"தெரியலை. அது எனக்கே அதிசயமா இருக்கு."

"அவர் விரோதி யாராவது?"

"அப்படி நான் ஒருத்தரையும் பார்த்ததில்லை."

"சரி... அவர் நிறைய வெள்ளி சாமான் சேகரிச்சாரே! அதைப் பற்றி சொன்னாரா?"

"சொல்லி இருக்கார். ஒவ்வொன்றின் விலையும் ஒரு லட்சம், ரெண்டு லட்சம்னு சொல்வார். எனக்கு அதெல்லாம் பிரமாதமாகத் தோணும்."

"அப்போ அந்தச் சந்தன பேலா கொடுத்தாரா?"

"அது அழகா இருந்திச்சு. கேட்டேன்... கொடுத்துட்டாரு."

"என்ன விலைன்னு சொன்னாறா?"

"லட்ச ரூபாய்க்கு விற்கும்னு சொன்னார்."



"இந்தப் பேலாவை உங்களுக்குப் பரிசாகக் கொடுத்துட்டாரு இல்லையா?"

"ஆமா."

சிங் நிமிர்ந்து சோபாவின் பிடிப்பில் சாய்ந்தார்.

இருவரும் சிறிது நேரம் நிசப்தம்.

இன்னும் சிநேகாவுக்கு கண் கலங்கிக்கொண்டு இருந்தது. கண்களை அடிக்கடித் துடைத்தாள்.

சிங் எழுந்தார்.

"சரி சிநேகா. நான் வரேன். இது வரைக்கும் நீங்க சொன்னது உண்மைன்னு நினைக்கிறேன்."

"எல்லாமே சத்தியம் சார்."

## 17

"ஏன் அந்த மனிதர் தனது குடும்பத்தைப் பற்றி சொல்லமாட்டேன் என்கிறார்?'

"அவரை நன்றாகத் தெரிந்த யாரோ கொன்று இருக்கிறார்கள். யாரது?"

"லிங்க்... என்ன சொல்றே!"

"எனக்குத்தான் ஏற்கெனவே குழப்பம் சார்."

சிறிது நேரம் இருவரும் மவுனம்.

லிங்க் பேசினான்.

"சார், இந்த வழக்கு எதுக்கு சார்? யாரும் சொந்தம் பந்தம் இல்லை. ஒரு சிநேகிதர் கூட இதிலே தென்படலை. துப்பு துலங்காத எத்தனையோ வழக்கிலே இதை ஒண்ணா வச்சுடுவோம்."

சிங் நிமிர்ந்து ஒரு பார்வை பார்த்தார். அது சிறிது நேரம் அப்படியே நின்றது.

"லிங்க்... நீயா சொல்றே?"

"ஆமா சார்."

"நீதானே இதையே கிளப்பிவிட்டவன்."

"ஆமா சார். இப்போ எனக்கே அலுப்பு வந்துட்டுது."

மெல்லிதாக சிங் சிரித்தார்.

"இந்தா பாரு, இதை விடக்கூடாது. சவால் கொடுக்கி வழக்கை விடவே கூடாது. எடுத்து முடிச்சாத்தான் வீரம் சட்டுபுட்டுன்னு முடியற வழக்கை எடுத்து என்ன லாபம்?"

"சரி... இதுவரை விசாரிச்சாச்சு. இப்போ என்ன செய்யப் போறீங்க?"

"ஒரு சின்ன வழி கண்டுபிடிச்சி இருக்கேன்."

லிங்க் நிமிர்ந்து பார்த்தான்.

"என்ன வழி சார்?"

"சிநேகா இருக்கிறா இப்போ."

"ஆமாம்."

"அவள் படத்தை பத்திரிகையிலே போட்டு, 'மாலினி, நீ எங்கே இருக்கிறே?'ன்னு ஒரு தலைப்பு கொடுக்கப்போறேன். 'கேர் ஆப் போஸ்ட் பாக்ஸ் அட்ரஸ்' போடுறேன்."

"சிநேகா ஒத்துக்கிட்டாளா?"

"ஓ... ஒத்துக்கிட்டாங்க."

## 18

**நா**ன்கு கடிதங்கள் வந்தன.

மூன்றில் "இன்ன இடத்தில் போய்த் தேடுங்கள்" என்று எழுதி இருந்தார்கள்.

அது சுவாரசியமாகப் படவில்லை. நான்காவது கடிதத்தை சிங் இரண்டு முறை படித்தார்.

அதில், குறிப்பிட்ட மாலினி என்பவள் சிறியவள் அல்ல. இறந்துவிட்டாள். அவளைப் பற்றி அறிய வேண்டுமானால் **'சாரதா என்பவளை விசாரிக்கவும்'** என்று எழுதி- சாரதாவின்



விலாசத்தைக் கொடுத்திருந்தது.

கடிதத்தை வைத்துவிட்டு யோசனையில் இருந்தார்.

ஒரு வாரத்தில் அத்தனைக் கடிதங்கள்தான் வந்திருந்தன.

"லிங்க், என்ன சொல்ற?" என்றார்.

"இன்னும் ஒரு வாரம் தாமதிக்கலாம்."

"இந்தக் கடிதத்தைப் பாரு."

பார்த்தான்.

"மாலினி சிறியவள் அல்லவா? பேத்தறாங்களே!"

"இந்தா லிங்க், உடனே முடிவு எடுக்காதே. அப்படியும் இருக்கலாம்."

"இன்னும் ஒரு வாரம் காத்திருக்கலாம் சார்."

காத்திருந்தார்கள்.

"மாலினியைப் பற்றி சில விவரங்களை என்னால் கொடுக்க முடியும். நேரில் வரவும். கந்தசாமி" என்று எழுதி இருந்தது.

"இதுக்கு மேலே தாமதிக்க வேண்டாம். போயிடலாம்" என்றார் சிங்.

"சாரதாவைப் பார்க்கவா?"

"ஆமாம் லிங்க். அதுதான் எனக்குச் சரியாத் தோணுது. நாளைக்கு சேலம் புறப்படறோம்."

## 19

**அ**ந்தக் கடிதத்தை எழுதியவள் பெயர் அமலி. அவளுக்கு வயது முப்பது இருக்கும்.

பள்ளியில் டீச்சராக இருந்தாள்.

மாலை அவள் வரும் வரை சிங் காத்திருந்தார்.

சேலம், மாலையில் கூட கொதித்தது.

"நீங்கதானே இந்தக் கடிதம் எழுதினது?" என்றார் சிங்.

"ஆமாம். உட்காருங்க."

"இந்த சாரதா என்கிறது யாரு. அவர்களுக்கு மாலதியைப் பற்றி ஏதாவது தெரியுமா?"

"சார், நாங்க சத்யசாயி சங்கத்தைச் சேர்ந்தவங்க. மாசம் ஒருநாள் சந்திப்போம்" என்றாள், அமலி.

சாரதா வீட்டுக்கு அழைத்துச் சென்றாள்.

சாரதாவுக்கு 50 வயது இருக்கும்.

பலவீனமாக இருந்தாள்.

"எனக்கு மாலினி தோழி. கிட்டத்தட்ட ஒரே வயசு. அவள் இறந்துபோய் நாலைஞ்சு வருஷமாச்சு."

"அந்த மாலினிக்கும், தனகோடிக்கும் தொடர்பு என்ன?"

"கணவன்- மனைவி."

"குடும்பம் நடத்தினாங்களா?"

"நல்லா நடத்தினாங்க."

"அப்புறம் பிரிஞ்சிட்டாங்களா?"

"அப்படி ஒரு நிலைமை வந்துட்டுதே."

"ஏன்?"

"சொல்லவே முடியாது. இரண்டு பேரும் நல்ல வசதியான குடும்பத்தைச் சேர்ந்தவங்க."

"சரி!"

"மாலினி அவங்க அப்பாவுக்கு ஒரே வாரிசு. தனகோடியும் அப்படித்தான்."

"சரி!"

திருமணம் பிரமாதமா நடந்திச்சு. அப்புறம் அன்பான குடித்தனமாக இருந்தாங்க. அதிலே என்னவோ கொஞ்சம், கொஞ்சமாக வித்தியாசம் வளர ஆரம்பிச்சுடுச்சு.

தனகோடி ஏதோ தொழிலில் இறங்கினார். அவருக்கு அதை நடத்தத் தெரியலை. பணம் போயிட்டே இருந்திச்சு. மாலினிக்கு பிடிக்கலை... இரண்டு பேருக்கும் தகராறு.



'நான் என் பணத்தை எடுத்து செலவு செய்யறேன்'னு வீம்பிலே இறங்கினார். யார் சொல்லியும் கேட்கலை.

கடைசியில் மூணு, நாலு வருஷத்துக்குள்ளே பணம் அத்தனையும் இழந்தாச்சு. இனிமே மனைவி சொத்திலே சாப்பிட வேண்டிய நிலைமை.

அப்போ மனைவி ஒரே ஒரு நிபந்தனை போட்டாள், 'அவளது சொத்தாவது தங்கணுமே'ன்னு. ஆனால், தனகோடி அதுக்கு சம்மதிக்கலை. சொல்லாமல் கொள்ளாமல் அவளைவிட்டுப் பிரிந்து தனியா போயிட்டார்.

மாலினி பொறுத்து பார்த்தா. போன கணவர் திரும்பவில்லை. வேறு தகவலும் கிடையாது. பேசாமல் அவள் தனது பிறந்த வீட்டுக்குப் போயிட்டாள்.

அங்கே போன பிறகு மனசிலே கஷ்டத்தோடுதான் இருந்தாள். எப்படியும் கணவனை அடைஞ்சுடலாம்னு நினைச்சா. அதுக்கு வழி இல்லாமப் போச்சு.

இந்த ரெண்டு பேருக்கு இடையிலே கண்ணன் ஒரு ஆளு. அவன் இந்தத் தனகோடிக்கு நண்பன். இவங்க ரெண்டு பேரையும் சேர்த்து வச்சுடறேன்னு வேலை பண்ணிப் பார்த்தாரு. ஆனா, அது நடக்கலை.

கண்ணன் நல்லவன்னு சில பேர் சொல்லுவாங்க. மோசக்காரன்னு பல பேர் சொல்லி இருக்காங்க. எது உண்மையோ தெரியாது. பிரிஞ்சவங்க பிரிஞ்சேதான் இருந்தாங்க.

இதுக்கு இடையிலே மாலினியின் அப்பா அசகாய சூரர். பெண்ணின் சொத்தைப் பாதுகாத்ததும் அல்லாமல், நிறைய சம்பாதிச்சும் கொடுத்தார்.

வீட்டிலே லட்சுமி தாண்டவமாடினாள். ஆனால், அவர் எத்தனை நாள் இருப்பார். இறந்து போயிட்டார். மிஞ்சினவள் மாலினி ஒருத்திதான்!

அப்பா போனதில் இருந்து அவளுக்கும் கவலை. சொத்து ஏராளமா இருக்கு. ரெண்டு, மூணு தலைமுறைகளுக்கு

போதும்.

வசதியாத்தான் அவளும் வாழ்ந்தா. இருந்தாலும் புருஷனோடு இல்லையேன்னு கவலை. அந்தக் கவலையிலேயே அவளுக்கு உடம்பு சரி இல்லாமல் போச்சு. படுத்துட்டா. ராஜ வைத்தியம் நடந்திச்சு.

இனிமே உயிர் வாழமாட்டோம் என்கிற நிலையிலே ஒரே ஒரு ஆசையை வெளியிட்டாள். கணவனை எப்படியாவது திரும்பிப் பார்த்துடணும்.

பலபேர் போனாங்க. தனகோடியைத் தேடிப் பிடிச்சாங்க.

ஒரு சின்ன வேலையிலே இருந்துக்கிட்டு இருநூறோ, முந்நூறோ சம்பாதிச்சு கஷ்டப்பட்டிட்டு– முற்றிலும் மாறி இருந்தாரு.

மனைவியைப் பற்றி எந்தத் தகவலும் இல்லாத நேரத்திலே, அவள் இறக்கப் போறா என்கிற செய்தி அவரை இரங்க வச்சது.

போய் மாலினியைப் பார்த்தார்.

அவளைப் பார்த்தாரோ இல்லையோ, அவராலே தாங்க முடியலை! அவள் கையைப் பிடிச்சுக்கிட்டு 'ஓ'ன்னு அழுதுட்டாரு.

ஆரம்பத்திலே அவர் செஞ்சதெல்லாம் தவறுன்னு சொல்லி புலம்பிப் புலம்பி அழுதாரு. தன்னை மன்னிக்கும்படி மாலினிகிட்டே மன்றாடிக் கேட்டுக்கிட்டாரு.

மாலினி அவரை மன்னித்தாள்.

'இறக்கும்போது உங்க மனைவியாகத்தான் இறக்க விரும்பறேன். உங்க கையாலேதான் கொள்ளி போடணும்'னு அழுது வேண்டிக்கிட்டா.

தனகோடி வந்தபிறகு மூணு நாள் இருந்தாள். கணவர் பறந்து பறந்து அவளுக்குப் பணிவிடை செய்தார்.

ஆனா, அவள் உடம்பை திரும்பி பழைய நிலைக்குக் கொண்டு வர முடியலை. நாலாம் நாள் தனகோடி மடியிலே படுத்துக்கிட்டே இறந்துட்டாங்க.



தனகோடி அதற்கு ஒரு அழுகை அழுதிருக்கிறார் பாருங்க! இந்த உலகம் கொள்ளாது."

சாரதா இங்கே நிறுத்தினாள். அவள் சொல்லும்போதே அடிக்கடி குரல் அடைத்தது.

கண்கள் கலங்கின. முடித்ததும் கண்களைக் கசக்கிவிட்டாள்.

சிங் ஒரு பெருமூச்சு விட்டார்.

"ஏன் மேடம், அப்போ மாலினியின் சொத்துதான் தனகோடியை அடைஞ்சது இல்லே?"–

"ஆமாம். முழுச்சொத்தும் அடைஞ்சது. ஏராளமான சொத்து."

"இப்போ மாலினியைச் சேர்ந்தவங்க யாரும் இல்லையா?"

"யாரும் கிடையாது."

"தனகோடி கொலையான விஷயம் உங்களுக்குத் தெரியுமா?"

"பத்திரிகையிலே பார்த்தேன்."

"சரி, பெண்டாட்டி பக்கம் யாரும் கிடையாது. தனகோடிக்கே சொந்தக்காரங்க யாரும் இல்லையா?"

"இருக்கிறதா தெரியலை."

"அந்தக் கண்ணன் என்ன ஆனார்?"

"சிநேகிதன்தான். அவரும் செத்துப் போயாச்சு."

"வேற யாராவது உண்டா?"

"யாரும் இருக்கிறதாகத் தெரியலை."

பிறகு, சாரதாவிடம் இருந்த மாலினியின் பழைய படங்களை சிங் பார்த்தார்.

மாலினிக்கு உண்மையில் சிநேகாவின் சாயல் கொஞ்சம் இருந்தது.

"சார்... மாலினி இறந்தப்புறம் தனகோடியாலே சோகத்தை அடக்க முடியலை. அழுதுக்கிட்டே இருந்தாரு. மார்பிலே அடிச்சுப்பாரு. தூக்குப் போட்டுடுவாரோன்னு கூட நாங்க

பயந்தோம். அவ்வளவு சோகம்.

இவ்வளவு அருமையான மனைவியாக இருந்திருக்கிறாளே அவளுடன் வாழாமல் போயிட்டமேன்னு ரொம்ப வருத்தப்பட்டாரு

இங்கே ரெண்டு மாசம் இருந்தாரு. மாலினியோட பொருள் ஏதாவது தென்பட்டால் போதும், 'குபுக்'குன்னு அழுவாரு. இதனாலேயே வீட்டிலே அவ பொருள், போட்டோ கிட்டோ எல்லாத்தையும் மறைச்சு வச்சாங்க."

சிங்குக்கு தனகோடியின் மன ஆழம் புரிந்தது.

சாரதாவிடம் தமது அனுதாபத்தைத் தெரிவித்துவிட்டு புறப்பட்டார்.

திரும்பி அழைப்பு வரும்போது லிங்கிடம் கேட்டார்.

"சாரதாவை விசாரிச்சாச்சு. தனகோடியின் மனைவியைப் பற்றி தெரிஞ்சாச்சு. இப்போ நம் வழக்குக்கு என்ன லாபமாச்சு?"

லிங்க் விழித்தான்.

"சார்! இதை நிச்சயம் இந்த 'பிஸினஸ்' ஆட்களே செய்திருக்கணும்."

"மயில்சாமி ஏன் செய்திருக்கக் கூடாது?"

"தூண்டுதல்லே செய்திருக்கலாம்."

"திரும்பி பழைய வட்டத்துக்கே வர்றோம்."

## 20

'சிங், அகப்பட்[illegible]கொண்டாயா?' என்று கேட்டது மனம்.

மேலும், கிழும[illegible]த்தார்.

உள்ளே அவம[illegible] இருந்தது. 'இதுபோல் ஒரு வழக்கும் மர்மமாக இருந்த[illegible]!'

லிங்க் தென்பட்[illegible], "அந்தக் கந்தசாமி கடிதத்தை எடு" என்றார்.



"அங்கே போகப் போறீங்களா?"

"ஆமா."

லிங்க் சிரித்தான்.

"அது ஏமாத்தா இருக்கும். மாலினி மதுரைப் பக்கம் எங்கே போயிருப்பா?"

"இல்லை லிங்க்... நாம போயாகணும்."

லிங்க் விழித்தான்.

இந்தத் தடவை வைகை விரைவு ரெயிலில் போனார்கள்.

சிங்குக்குத் தவிப்பாக இருந்தது.

"கந்தசாமியிடம் ஏதாவது விஷயம் கிடைக்குமா?"

"கிடைத்தால் சரி! இல்லாவிட்டாலும் பரவாயில்லை."

கடிதங்கள் போட்ட அத்தனை பேரையும் பார்க்க விரும்பினார் அவர்.

'கெஸ்ட் ஹவுஸ்' ஒன்றில் தங்கிவிட்டு, காலையில் உள்ளூர் போலீஸ் ஜீப்பை வாங்கிக்கொண்டு புறப்பட்டார்.

மதுரை வெளி விளிம்பில் அந்த விலாசம் இருந்தது.

கிராமப்புறம் அது. தோட்டத்தின் நடுவே சின்ன வீடாக இருந்தது.

அதன் அருகே சின்ன குடிசை அமைப்பு. அதன் வாசலில் ஒரு கயிற்றுக் கட்டிலில் கந்தசாமி அமர்ந்திருந்தார். எழுபது வயது இருக்கும்.

வந்தவர்களுக்கு அவர் நாற்காலியைக் கொண்டு போட்டார்.

கந்தசாமி எழுதிய கடிதத்தை அவரிடமே காட்டினார் சிங்.

"ஆமாங்க... நான்தாங்க எழுதினேன்."

"மாலினியைப் பற்றி என்ன தெரியும்?"

கந்தசாமி புன்னகைக் காட்டினார்.

"நான்தாங்க அவங்க வீட்டுத் தோட்டக்காரனா இருந்தேன். அதனாலே கொஞ்சம் தெரியும்."

"எத்தனை வருஷம் இருந்தீங்க?"

"முப்பத்தஞ்சு வருஷங்க."

"மாலினி அம்மா இறந்த வரைக்கும் இருந்திங்களா?"

"ஆமா."

"மாலினியைப் பற்றி என்ன தெரியும்?"

"பாவங்க. எங்க எஜமானுக்கு ஒரே பொண்ணு... அதுக்கு வாழ்க்கை சரியா இல்லாம போச்சு."

"கடைசியிலேதான் கணவர் வந்து சேர்ந்தாரில்லே?"

"ஆமாங்க. அப்புறம் ரொம்ப வருத்தப்பட்டாரு. என்ன பிரயோஜனம். மாலினிம்மா இறந்துட்டாங்க."

"இப்போ தனகோடியை யாரோ கொலை பண்ணிட்டாங்க தெரியுமில்லே?"

"பத்திரிகையிலே போட்டிருந்ததாமே! என் பொண்ணு சொல்லிச்சு."

"அதை யார் செஞ்சிருப்பாங்கன்னு நினைக்கறீங்க?"

"கூடச் சேர்ந்த வியாபாரிங்க யாராவது செஞ்சிருப்பாங்க."

"அவர் நடத்தின வியாபாரம் என்னன்னு தெரியுமா?"

"சொல்லி இருக்காருங்க."

"பழைய வெள்ளி" என்றார் சிங்.

"ஆமாங்க. பழங்கால பொருள். நான் கூட இங்கே ஒருத்தர்கிட்டே இருந்து ஒரு இவ்வளவி வாங்கிக் கொடுத்தேன்."

"ஓ... அப்படீங்களா?"

"அவர் இறந்ததைக் கேட்டு நான் ரெண்டு நாள் பட்டினி கிடந்தேங்க."

"நல்ல பழக்கமா?"

"ஆமா. இப்போகூட நாலு மாசம் முன்னாடி இங்கே வந்துட்டுப் போனாருங்க."

"இங்கேயா?"

"ஆமாங்க."

"இங்கே எதுக்கு?"



"அதுங்க..." என்று இழுத்தார். அவர் முகத்தில் ஒரு மர்ம முறுவல் ஏற்பட்டது.

'எதாவது ரகசியம் இருக்குமா?'

"என்ன விஷயம்... சொல்லுங்க!"

கந்தசாமி யோசனையில் இருந்தார்.

சிங்குக்கு எங்கேயோ அரித்தது. 'இங்கே எதாவது விஷயம் வருமா?'

"அதுங்க..."

"சும்மா சொல்லுங்க."

"நீங்க எங்கேயும் சொல்லிடக்கூடாது. பெரிய இடத்து விஷயம்."

"சொல்லுங்க. எங்களுக்கு உதவுதான்னு பார்க்கிறோம். வழக்கு ஒரு சிக்கலா இருக்கு."

கந்தசாமி ஆலோசனையில் இருந்தார். பின்னர் விஷயத்தைத் தணிந்த குரலில் ஆரம்பித்தார்.

"இவங்க கணவன்– மனைவி பிரிஞ்சு இருந்த விஷயம் எல்லாம் உங்களுக்கு தெரிந்திருக்கும்."

சிங் தலையை ஆட்டினார்.

"அப்போ கண்ணன்னு ஒருத்தருங்க. தனகோடியோட நண்பர். அவர் சமாதானம் செய்யப் பார்த்தாரு... பலமுறை வந்தாரு."

"சரி!"

"இதிலே எப்போ அவருக்கு சபலம் வந்திச்சோ தெரியலை. மாலினிம்மா மேலே ஆசைப்பட்டிருக்காரு."

"ம்."

"அதை ஜாடைமாடையா அம்மாகிட்டே தெரிவிச்சிருக்காரு."

"ஓ..."

"மாலினிம்மாவை அவரே மணம் முடிக்கலாம்னு நினைச்சிருக்காரு. அது அந்த அம்மா காதிலே விழுந்த உடனே பாம்பாக சீறிட்டாங்க."

"சரி."

"நான் துரோகம் செய்யமாட்டேன்னு சொல்லிட்டாங்க. அப்புறமும் இந்தக் கண்ணன் வந்துட்டு போயிட்டிருந்தாரு!

"சரி."

"ஒரு நாள் யாரும் இல்லாத நேரத்திலே மாலினிம்மாவுக்கு காப்பியிலே மயக்க மருந்தோ... என்னத்தையோ போட்டுக் கொடுத்துட்டாருங்க. மயக்கமானதும் அவங்களைக் கெடுத்திருக்காரு."

"மாலினிக்கு நினைவு இல்லாதபோது..."

"ஆமாங்க. இது ஒரு தடவை நடந்திச்சோ... ரெண்டு தடவை நடந்திச்சோ. அவங்க கர்ப்பம் ஆயிட்டாங்க."

"அடப் பாவமே!"

"அதுவே ரொம்ப நாள் கழிச்சுதான் தெரிஞ்சுது. அவங்களுக்கே அதிர்ச்சி ஆயிட்டுது. நினைக்கவே முடியலே. டாக்டர்கிட்டே காட்டி இருக்காங்க. கர்ப்பம்னும், கலைக்கக்கூடிய கட்டத்தைத் தாண்டியாச்சுன்னும் சொன்னாங்க. பெரிய அவமானம் அவங்களுக்கு."

"ம்."

"வேறே ஊர்லே போய் தங்கி இருந்து, குழந்தையைப் பெற்றாங்க... பெண் குழந்தை அது."

சிங்குக்கு புது வழிகள் துலங்கியது. கந்தசாமி தொடர்ந்தார்.

"அதை அநாதை விடுதியிலே கொடுத்துடலாம்னு நினைச்சாங்க. அவங்களுக்கும் மனசு கேட்கலை. எனக்கும் கேட்கலை. நான் வளர்க்கிறேன்னு சொன்னேன். கொடுத்துட்டாங்க. இதெல்லாம் நடந்து இருபது வருஷம் ஆயிட்டுதே!"


"கண்ணன் என்ன ஆனாரு?"

"அப்புறம் வீட்டுக்கு அவர் வரவே இல்லை. ஆறு மாசத்திலே இறந்திட்டாரு."

"சரி! இந்தச் சம்பவம் தனகோடிக்குத் தெரியுமா?"

"தெரியும் சார். இறந்து போறதுக்கு முன்னாடி இதை





அவர்கிட்டே சொல்லிட்டுத்தான் மாலினிம்மா இறந்தாங்க.”

“தனகோடி அந்தப் பெண்ணைப் பார்த்தாரா?”

“பார்த்தாரு. அப்படியே மாலினிம்மா சாயல். அதே நிறம் சார். தத்தளிச்சுப் போயிட்டார்.”

“பெண்ணை தன்கிட்ட அழைச்சுக்கிடலையா?”

“எவ்வளவோ கூப்பிட்டுப் பார்த்தாரு. பொண்ணு மாட்டேன்னுடுத்து. அதுக்கு அம்மா மேலே கோபம். தனகோடி மேலேயும் ரொம்பவும் கோபம்.”

“ஏன்?”

“அது அந்தக் காலத்துப் பெண்ணுங்க. அம்மா உண்மையை மறைச்சுட்டாங்கன்னு கோபம். தனகோடி சரியா நடத்தலே, அதனாலேதான் தன் அம்மாவுக்கு எல்லாக் கஷ்டமும் வந்திடுச்சுன்னுதான்.”

“..............”

“அவர்கூட போகமாட்டேன்னுடுத்து.”

“ஆமா... நாலு மாசம் முன்னாடி இங்கே வந்தாரே...?”

“கெஞ்சிக் கெஞ்சிப் பார்த்தாரு. மோகினி (பெண்ணின் பேரு) வந்தாத்தான் நிம்மதின்னு சொன்னாரு. தனக்கு வாரிசு அவள்தான்னு சொன்னாரு. மோகினி கேட்க மாட்டேன்னுடுத்து.”

“அப்புறம்?”

“அதிலேயே ஒடிஞ்சு போயிட்டாரு. ஒரு நாள் துவண்டு விழுந்துட்டாருங்க! டாக்டர் சுந்தரம்னு பிரபலமானவரு... அவர்கிட்டே கொண்டு போயிட்டோம். ஒரு மாசம் இங்கே ஓட்டல்லேயே தங்கி சிகிச்சை எடுத்துக்கிட்டாரு. அதில் இருந்தே அவர் பழைய மாதிரி இல்லை சார்.”

“அப்படியா... ஒரு மாசம் இருந்தாரா?”

“ஆமாம். தினம் இங்கே வருவாரு. ‘என் வெள்ளி மோகினியை எங்கே?’ன்னு கேட்பாரு. அந்தப் பெண் இவர் முன்னாடியே வராது... அப்படி வெறுப்பு.”



“சரி! அவர் சொத்து ஏதாவது இருந்தா, இப்போ இந்தப் பெண்ணுக்குத்தானே வரும்?”

“ஆமா சார். இங்கேகூட தனியா ஒரு வீடு கட்டி பூட்டி வச்சிருக்கார். அவர் இறந்து போன ஆறு மாசத்திலே அவள்கிட்டே ஒப்படைக்கணும்னு சொல்லி இருக்கார்.”

“அந்தப் பெண் ஒத்துக்குமா?”

“ஒத்துக்க வைக்கணுங்க... அப்புறம் ‘இன்ஷூரன்ஸ்’ பணமும் இவள் பேருக்குத்தான் போட்டு வச்சிருக்கார். அதுவும் ஆறு மாசத்துக்குப் பிறகு வாங்கிக்கணும்னு சொல்லி இருக்காரு.”

சிங் யோசித்தார்.

‘அதென்ன ஆறு மாதம்?’ என்று நினைத்தார் அவர்.

## 21

தனகோடிக்குச் சிகிச்சை அளித்த டாக்டர் சுந்தரத்திடமும் பேசிவிட்டு, சென்னைக்கு ரெயில் ஏறினார் சிங்.

மீண்டும் அவர் முகத்தில் கவலை இருந்தது.

பிரயாணம் முழுவதும் பேசவில்லை.... யோசனையிலேயே இருந்தார்.

சென்னையில் இறங்கியதும் பத்து மணிக்கு லிங்க்கை ‘ரால் கோர்ட்’டுக்கு வரச் சொன்னார்.

வீட்டுக்குப் போய்விட்டு வர மூன்று மணி நேரங்கள்தான் இருந்தன. இருந்தாலும் சிங் தேவையில்லாமல் அப்படிக் கூப்பிடமாட்டார்.

‘டாண்’-என்று பத்து மணிக்கு வாசலில் காத்திருந்தான்.

சில நிமிடங்களில் சிங் வந்தார். கதவைத் திறந்து இருவரும் உள்ளே போனார்கள்.

நேராக அவர் ‘டைனிங்’ அறைக்கு நடந்தார். கீழே சிதறிக் கிடந்த பொருட்கள் இன்னும் அப்படியே!

கடிகாரச் சிதறலுக்குத்தான் நேராகச் சென்றார். ஒவ்வொன்றாக கையில் எடுத்துப் பார்க்க ஆரம்பித்தார்.

ஒரு சக்கரத்தை எடுத்து, "லிங்க்" என்றார்.

அவன் அந்தச் சக்கரத்தைப் பார்த்தான். "சார்... என்னவோ மேலே படிந்திருக்கே?"

"அதைத்தான் சொல்றேன். நெருப்புப் பட்டாத்தானே இப்படி ஆகும்?"

"ஆமா சார்."

"இந்தக் கடிகாரத்தை சுவர்லே நல்ல 'டானா' ஆணி அடிச்சு மாட்டி இருக்கு. இதை லேசிலே தள்ள முடியாது. சண்டையிலே தள்ளினாங்க என்கிறது எனக்கு சந்தேகமாக இருந்திச்சு."

"சரி... சார்! அப்போ எப்படி விழுந்து சிதறிச்சு?"

"உள்ளே வெடி வச்சிருக்காங்க."

திடுக்கிட்டான்.

"ஆமாம். அது வெடிக்கிறதுக்கு முன்னாடி ஒரு துப்பாக்கியை வெடிக்கச் செய்திருக்காங்க."

"என்ன சார், புதுமையா இருக்கே?"

"இப்போ நான் சொல்றதைக் கேளு... டாக்டர் சுந்தரம்கிட்டே பேசினேன். தனகோடிக்கு ரத்தப் புற்றுநோய்."

"ஓ..."

"தனகோடிகிட்டே அதை மட்டுமா... இன்னும் சில மாசந்தான் உயிர் வாழ்வீங்கன்னும் சொல்லிட்டாரு.

தனகோடி யோசிச்சி இருக்கார். தன் பெண் மோகினி மேலே ஒரே ஆசை. எல்லா சொத்தையும் அவள் மேலே எழுதி வைக்க திட்டம். ஆனா, எல்லாமே மாலினி கொடுத்ததுதானேன்னு நினைச்சிருக்கார்.

சுயமாக ஏதாவது பொருள் சேர்த்துக் கொடுக்கணும்னு நினைச்சார்... அதனாலே தன் 'இன்ஷ்யூரன்ஸை' அந்தப் பெண்



பேர்லே எழுதி வச்சுட்டாரு. இந்தச் சாமான் எல்லாம் திருட்டு போனதாகவும், தான் கொல்லப்பட்டதாகவும் காண்பிக்க விரும்பி இருக்கிறார்.

வெள்ளிச் சாமான் எல்லாத்தையும் திருட்டுக்கு பயந்து 'இன்ஷூர்' பண்ணி இருக்கிறார். அந்தப் பணத்தையும் அவ மேலேதான் எழுதி வச்சிருப்பார்?

இப்போ ரத்தப் புற்றுநோய்... ஒரு மாசம் முன்னாடி சாக விரும்பி இருக்கிறார். சின்ன துப்பாக்கியை இந்தக் கடிகாரத்து எந்திர அமைப்போடு இணைச்சு, குறிப்பிட்ட நேரத்திலே அது சுடும்படி பண்ணி இருக்காரு.

சுட்ட பிறகு துப்பாக்கி அங்கே கடிகாரத்திலே இருக்கக் கூடாது. அதனாலே சுட்ட அஞ்சு நிமிஷத்துக்குள்ளே வெடி ஒண்ணு உள்ளே வெடிக்கும்படி பண்ணி இருக்காரு.

எல்லாமே சரியா நடந்து போச்சு!

கொள்ளை நடந்து, கொலை நடந்த மாதிரி ஒரு பாவனை உண்டாக்க பொருள்களைச் சிதற அடிச்சிருக்காரு."

லிங்க் குதித்தான்.

இதிலே அவர் செய்த யுக்திகளை நினைச்சு அவரைத் தூற்றக்கூடாது! தன் மகள் (அது இன்னொருத்தருக்கு பிறந்ததாக இருந்தாலும்) மேலே வைச்ச உயிர்ப் பாசம்தான் ரொம்ப உயர்வானது. அதைத்தான் நாம போற்றணும்.

சிங் சொன்ன மாதிரி மதுரையில் பூட்டிய கட்டடத்தில் அத்தனை வெள்ளிச் சாமான்களும் இருந்தன.

அதன் மீதுள்ள 'இன்ஷூர்' தொகையையும், தன் ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் தொகையையும் மோகினி மீதே எழுதி வைத்திருந்தார்.

அவள் ஆரம்பத்தில் அவைகளை ஏற்க மறுத்தாலும், ஒருத்தர் தனக்காக இவ்வளவு தியாகம் செய்தார் என்பதை நினைத்து ஏற்றுக்கொண்டாள்.

**(முற்றும்)**